CSI KARNATAKA CENTRAL DIOCESE

# St. Paul's Church

**ESTD 1840 AD SPG**

**Shivajinagar (Adjacent to Bowring Hospital), Bangalore-560 051**

# வழிபாட்டு முறைமைகள்



தென்னிந்திய திருச்சபை
கர்நாடக மத்திய திருமண்டலம்

# தூய பவுல் ஆலயம்

சிவாஜிநகர், பெங்களூர்-560 051




## பொருளடக்கம்


| | |
|---|---|
| தூய நற்கருணை வழிபாடு | 1 |
| காலை வழிபாடு | 14 |
| ஞானஸ்நானம் | 31 |
| குழந்தைகள் ஞானஸ்நானம் | 38 |
| திடப்படுத்தல் | 48 |
| உடன்படிக்கை ஆராதனை | 56 |
| தபசு நாட்களின் வழிபாடு | 64 |

# Liturgical Colour's of the Church Calendar



**Dark Blue - 4 Sundays during Advent**



**Gold - Christmas, Easter, Church Anniversary, Paul's Day, Harvest Festival**



**White - Covenant Service, Trinity Sunday, All Saints Day Six Sundays after Easter**



**Purple - Six Sundays during Lent**



**Red - Palm Sunday Pentacost, Martyrs Day**



**Black - Good Friday and Funerals**



















# தூய நற்கருணை வழிபாடு

*பவனி பாடல்*

*சபையார் நின்று கொண்டிருக்க குரு மட்டும் கர்த்தருடைய ஜெபத்தை சொல்லுதல்*

## ஜெபம் செய்வோம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களை சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

*குருவானவர் தொடர்ந்து ஜெபித்தல்*

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூறவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளை சுத்தம்பண்ணியருள எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

*எல்லாரும் சேர்ந்து பாட அல்லது சொல்ல வேண்டியது.*

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே. பரமராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம். உம்மைப் புகழுகிறோம். உம்மை வணங்குகிறோம். உம்மை மகிமைப்படுத்துகிறோம். உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு தோத்திரம் செலுத்துகிறோம்.**

**கர்த்தராயிருக்கிற ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே; கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிறதேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.**

**உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.**

**உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும்.**

**நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், இயேசு கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். ஆமென்**

*சபையார் உட்காரவும்*

## பத்துக் கற்பனைகள்

**கடவுள் திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன:**

1. உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

   *(ஒவ்வொரு கற்பனைக்கும் பின்னால் சபையார் சேர்ந்து பாடுதல்)*

   **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்த பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்.

5. உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக

8. களவு செய்யாதிருப்பாயாக

9. பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக

10. இச்சியாதிருப்பாயாக

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.**

( அல்லது )

*சபையார் உட்காரவும்*

*பின் குரு சொல்லுவது*

நியாயப் பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நமது ஆண்டவர் தொகுத்து அருளியது; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும், அன்பு கூறுவாயாக என்பதே பிரதான கற்பனை.

**சபை: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைகொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்பதே.

**சபை: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென வேண்டிக்கொள்கிறோம்.**

## பாவ அறிக்கை

சகோதரரே, நாம் இப்பொழுது கடவுளுடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும். ஆண்டவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் பெற்றுக்கொள்ளவும். இங்கே கூடி வந்திருக்கிறோம். உத்தம மனஸ்தாபத்தோடும், விசுவாசத்தோடும் அவரிடத்தில் கிட்டிச் சேருவதற்காக கடவுளுடைய கிருபையைத் தேடி, முழங்காற்படியிட்டு, அமைதியாக நம்மை நாமே சோதித்து அறிவோமாக.

*எல்லோரும் முழங்காற்படியிடுவர். சற்று நேரம் அமைதியாயிருந்தப்பின் குரு சொல்லுவது:*

**உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி கடவுளுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, புதிதாக்கப்-பட்டவர்களாய், அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் சர்வ வல்லமையுள்ள கடவுளோடு ஒப்புரவாகும்படி, மறுபடியும் உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.**

*டீக்கன் முன்சொல்ல, எல்லோரும் சேர்ந்து சொல்லுவது*

**பரம பிதாவே, உமக்கு விரோதமாகவும், எங்கள் அயலாருக்கு விரோதமாகவும், பாவஞ்செய்தோமென்று அறிக்கையிடுகிறோம். ஒளியில் நடவாமல், இருளில் நடந்து வந்தோம். கிறிஸ்துவின் நாமத்தை சொல்லியும் தீமையை விட்டு விலகவில்லை. எங்களுக்கு இரங்கவேண்டுமென்று உம்மிடம் மன்றாடுகிறோம். இயேசு கிறிஸ்துவினிமித்தம், எங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னியும். உமது பரிசுத்த ஆவியினால் எங்களை சுத்திகரித்து எங்கள் மனசாட்சியை உயிர்ப்பித்தருளும். உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி, நாங்கள் இனிப் புது ஜீவனுள்ளவர்களாய் உமக்கு ஊழியம் செய்யத்தக்கதாக மற்றவர்களுக்கு மன்னிக்க எங்களுக்கு உதவிபுரியும். ஆமென்.**

*பின்பு குருவானவர் எழுந்து நின்று சொல்லுவது*

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் நமது இரட்சகராகிய கிறிஸ்து திருவுளம்பற்றுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டு பாரம்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். பரி. மத் 11 : 28

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். பரி. யோவா. 3 : 16

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. 1 தீமோ. 1 : 15

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்

ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. 1 யோவா 2 : 1

*சற்று நேரம் அமைதியாய் இருந்தபின் குரு சொல்லுவது:*

நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள் உத்தம மனஸ்தாபத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்பி தங்கள் சகோதரர் குற்றங்களை மன்னிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச் செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி, நிலைநிறுத்தி உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக.

**ஆமென், தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.**

*குரு: கர்த்தர் உங்களோடிருப்பாராக,*

*சபை: அவர் உமதாவியோடும் இருப்பாராக,*

**ஜெபம் பண்ண கடவோம்:**

*அந்நாளுக்குரிய சுருக்க ஜெபம் (Collect for the day)*

*நிருபப்பாடம் வாசித்தல் (Epistle)*

**பாமாலை**

*நற்செய்தி பாடம் வாசித்தல் (Gospel to be read only by the Celebrant)*

*நற்செய்தி பாடம் வாசிக்கும் முன்*

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக**

*நற்செய்தி பாடம் வாசித்த பிறகு*

**கிறிஸ்துவுக்கே தோத்திரம் உண்டாவதாக**

*வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.*

**ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே, தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர். ஜோதியில் ஜோதியானவர், மெய்தேவனில் மெய்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப் பட்டவர். பிதாவோடே ஒரே தன்மையுடையவர். சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும், நமக்கு இரட்சிப்பு உண்டாகவும், பரமண்டலத்திலிருந்து இறங்கிப் பரிசுத்த ஆவியினாலே, கன்னிமரியாளிடத்தில் அவதரித்து, மனிதனானார். நமக்காகப் பொந்தியுபிலாத்துவின் காலத்தில், சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேத வாக்கியங்களின்படி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க, மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.**

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத்தொழுது தோத்திரிக்கப் படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிறபரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.

*பாமாலை*

*அருளுரை*

**ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும் (2)**
**நொறுக்கும் உருக்கும் உருவாக்கி நிரப்பும்**
**ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்**

*அனைவரும் எழுந்து நிற்க*

*அருளுரை ஆற்றிய பிறகு மேடையிலிருந்தே திருமேசையை நோக்கி இப்போதும் தந்தைக்கும் மைந்தனுக்கும் தூய ஆவிக்கும், சகல கனமும், துதியும், தோத்திரமும் இப்பொழுதும், எப்பொழுதுமான சதா காலங்களிலும் உண்டாவதாக ஆமென்.*

மனிதர் உங்கள் நற்கிரியைகளை கண்டு விண்ணில் இருக்கும் உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது.

## அப்பம் பிட்குதல்

*எல்லோரும் எழுந்து நிற்க குரு சொல்லுவது:*

இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எவ்வளவு நன்மையும், எவ்வளவு இன்பமுமானது. சங். 133 : 1

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம். 1 கொ. 10 : 17

**அனைவரும்: நான் அவருடைய கூடாரத்திலே ஆனந்தப் பலிகளையிட்டு கர்த்தரைப் பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங். 27 : 6**

*சமாதான வாழ்த்துதல் பகிர்ந்துகொள்ளுதல்*

*பாட்டு பாடும்பொழுது சபையாருடைய காணிக்கைகளுடன் திருவிருந்துக்கு வேண்டிய அப்பமும் திராட்சை இரசமும் முன்னால் கொண்டுவரப்பட்டு, திருமேசையில் வைக்கப்படும். கொண்டுவருபவர்கள் ஜெபம் சொல்லப்படுகையில் திருமேசையின்முன் நிற்பார்கள்.*

எல்லோரும் இன்னும் நின்று கொண்டிருக்க காணிக்கை ஜெபம் செய்யப்படும்.

## ஜெபம் செய்வோம்

*பிறகு குருவும் ஜனங்களும் முழங்கால்படியிட்டுச் சேர்ந்து சொல்லுவது.*

**இயேசுவே உத்தமப் பிரதான ஆசாரியரே, நீர் உமது சீஷர்கள் மத்தியில் பிரசன்னமாயிருந்ததுபோலவே, எங்கள் மத்தியிலும் பிரசன்னமாகி, அப்பத்தைப் பிட்கையில், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தியருளும். நீரே பிதாவோடும், பரிசுத்த ஆவியோடும், சதாகாலமும் ஒரே கடவுளாக ஜீவித்து அரசாளுகிறீர். ஆமென்.**

*குரு இப்பொழுது எழுந்து நிற்பார்.*

ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

**சபை: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.**

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

**சபை: எங்கள் இருதயத்தை ஆண்டவரிடத்தில் உயர்த்துகிறோம்.**

நம்முடைய ஆண்டவராகிய கடவுளுக்குத் தோத்திரம் செலுத்தக் கடவோம்.

**சபை: அப்படி செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.**

ஆண்டவரே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய கடவுளே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறது. தகுதியும், நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

*உமது குமாரனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நீர் வானங்களையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர். மனிதனையும் உமது சாயலாக உண்டாக்கினீர். அவன் பாவத்தில் விழுந்தபோது புது சிருஷ்டியின் முதற்பலனாக நீர் அவனை மீட்டுக்கொண்டீர்.*

( *அந்தந்த நாளுக்குரிய விசேஷித்த முகவுரை உண்டானால், இந்த பகுதியை விட்டுவிட்டு, இதற்குப் பதிலாக அதை வாசிக்கலாம். )

**ஆதலால் தூதரோடும், பிரதான தூதரோடும், பரம சபையனைத்தோடும் நாங்கள் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப் படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மைத் தோத்தரிக்கிறோம். ஆமென்.**

*எல்லாரும் முழங்காலில் நின்று சற்றுநேரம் அமைதியாய் இருக்கவும்.*

*அனைவரும் சேர்ந்து சொல்லுதல்*

**இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பி சேருகிறோம். உம்முடைய மேசையின்கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கம் செய்கிற இலட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத சரீரத்தாலும், இரத்தத்தாலும் எங்கள் பாவமுள்ள சரீரமும், ஆத்துமாவும் சுத்தமாகி, எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கு ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.**

*அனைவரும் பாடுதல்*

**கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும், வருகிறவருமானவர் தோத்தரிக்கப்பட்டவர். உன்னதத்தில் ஓசன்னா.**


*குருவானவர் செய்யும் ஜெபம்*

சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமபிதாவே, தேவரீர் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரே தரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து. சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும்

பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல் தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அனுசரித்து வரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே. இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நிமயத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் பெற்றுக் கொள்ளும்போது, அவருடைய பரிசுத்தமுள்ள சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாகும்படி கிருபை செய்தருள வேண்டுமென்று மிகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ✝ அப்படியே போஜனம் பண்ணினபின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து. நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி, உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; ✝ இதைப் பானம்பண்ணும் பொழுதெல்லாம் என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ✝



**Chalice -** Used to Serve Wine




**Veil, Burse and Corporal**



**Purificator**



**Ciborium- Used to Serve Hosts**




**Paten, Host and Pall**



**Flagon - Used to fill Wine**

**ஆமென். கர்த்தாவே, உமது மரணத்தை நினைவு கூறுகிறோம். உமது உயிர்தெழுதலை அறிக்கையிடுகிறோம். நீர் திரும்பிவரக் காத்திருக்கிறோம். கிறிஸ்துவே, உமக்கே தோத்திரம் உண்டாவதாக. ஆமென்.**

**இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயும், நாங்கள் ஆசீர்வதிக்கிறபாத்திரம், கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கும்படி எங்களையும் நீரே தந்த இந்த அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் உமது பரிசுத்த ஆவியால் பரிசுத்தப்படுத்தவேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடு பிரார்த்திக்கிறோம். நாங்களெல்லாரும் எங்கள் ஆண்டவர் கிறிஸ்துவில் கூட்டி இணைக்கப்பட்டவர்களாகி, விசுவாசத்தில் ஒருமைப்படவும், தலையாகிய அவருக்குள் எல்லாவற்றிலேயும் வளரவும் கிருபை செய்யும். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய உமக்கு, அவர் மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.**

*குரு முழங்காற்படியிடலாம்*

நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா ? I கொரி. 10 : 16

சபை பாடுதல்

**உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.**

**உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.**

**உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்.**

அனைவரும் நற்கருணையில் பங்கு பெற்றபின் சபையாரும் முழங்காலில் நின்று:

கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டவர்களாகிய நாம், அவருக்கு தோத்திரம் செலுத்துவோமாக.

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்; ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.**

**சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரமபிதாவே, உமது நேச குமாரனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள், எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, அவருடைய விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைப் போஷித்திருக்கிறீர்; எங்கள் பாவங்களை மன்னித்து நித்திய ஜீவனை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறீர். அளவிடப்படாத இந்த நன்மைகளுக்காக உம்மைத் தோத்திரிக்கிறோம். சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இதுவே நாங்கள் செய்யத்தக்க ஆத்மீக ஆராதனை. நாங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவரீருடைய நன்மையும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, எங்கள் மனம் புதிதாகிறதினாலே, மறு ரூபமாகும்படி எங்களுக்கு அருள்புரியும். கடைசியில் நாங்கள் உமது பரிசுத்தவான்கள் அனைவரோடும் உமது நித்திய ராஜ்யத்தின் ஆனந்தத்தை அடையத்தக்கதாக, இவ்வுலகத்தில் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்குக் கிருபை**

**செய்யும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாய் சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இவைகளை வேண்டிக்கொள்கிறோம்.**

**ஆமென். எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும் தோத்திரமும், கனமும் வல்லமையும், பலமும், சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.**

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருந்து. நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவைபற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

முடிவு கீதம்

SPC

# காலை வழிபாடு

ஆரம்ப ஜெபம்

நாம் கடவுளைத் தொழுவோம்.

கடவுள் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். யோ. 4:24

நம்முடைய பிதாவாகிய கடவுளாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ரோ. 17

இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். சங். 118:24

பவனி பாடல் பாமாலை:

ஆராதனை நடத்துபவர்: சேனைகளின் கடவுளாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதத்திலே ஓசன்னா.

**சபை : கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும், வருகிறவருமானவர் தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா**

ஆ.ந. : கடவுளே, நீர் பரிசுத்தர்

**சபை : கடவுளே, நீர் பரிசுத்தர்**

ஆ.ந. : சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்

**சபை : சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்**

ஆ.ந. : சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்

**சபை : சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்**

ஆ.ந : ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

**சபை : ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.**

ஆ.ந. : பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

**சபை : பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.ர்**

ஆ.ந. : ஆண்டவரே, எங்கள் ஜெபங்களையும், ஆராதனையையும் ஏற்றுக்கொண்டு, எங்கள்மேல் கிருபையாயிரும்.

எல்லோரும்: ஆண்டவரே, எங்கள் மேல் மனதுருகி, எங்கள் மேல் கிருபையயிரும்.

## பாவ அறிக்கை

*ஆராதனை நடத்துகிறவர் கீழ்க்கண்ட திருவசனங்கள் போன்றவற்றைத் திருமறையிலிருந்து வாசிக்கலாம்.*

நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாவோம் நமக்குள் உண்மை இல்லை. நமது பாவங்களை அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எவ்வித அநீதமும் நீங்க நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் நம்பத்தக்கவரும் நீதியும் உள்ளவர். 1 யோ. 1:8, 9.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப்போய், 'தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமது பார்வையிலும் பாவம்செய்தேன். இனி உம்முடைய மகன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்லன், உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்' என்பேன். லூ. 15 : 18, 19.

கடவுள் இராஜ்யம் சமீபித்திருக்கிறது; மனந்திரும்பி சுவிசேஷத்தில் நம்பிக்கை வையுங்கள். மா. 1 : 15.

நமது பலவீனங்களுக்காகப் பரிதபிக்க முடியாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாத பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். எபி. 4 : 15.

ஆ.ந. நாம் முங்காற்படியிட்டு மௌனமாக நம்மை நாமே சோதனை செய்வோம்.

*எல்லாரும் முழங்காற்படியிட்டுச் சற்று நேரம் அமைதியாயிருப்பார்கள்.*

*பின்பு:*

ஆ.ந. சர்வ வல்லமையுள்ள கடவுளிடத்தில் நாம் நமது பாவங்களைத் தாழ்மையோடு அறிக்கையிடுவோம்.

பின்வரும் பாவ அறிக்கையை யாவரும் சொல்லுவர்.

**சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும்**

**விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம். எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனி தேவ பக்தியும், நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக்கிருபை செய்தருளும். ஆமென்.**

*குருவானவர் பாவமன்னிப்பை எழுந்து நின்று அறிவித்தல்.*

சர்வ வல்லமையும், மிகுந்த இரக்கமுமுள்ள ஆண்டவர் மன்னிப்பையும் பாவ நிவிர்த்தியையும் நமக்கு கட்டளையிட்டருளி, வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கான காலத்தையும், தமது பரிசுத்தாவியின் கிருபையையும் தேற்றுதலையும் தந்தருளுவாராக. ஆமென்.

*இப்பொழுது ஆராதனை நடத்துகிறவர் முழங்காற்படியிட்டுச் கர்த்தருடைய ஜெபத்தை ஜனங்கள் கேட்கத்தக்கதாய்ச் சொல்ல வேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிறஜனங்களும் அவரோடேகூட இதைச சொல்லவேண்டும்.*

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்.**

*பின்னும் அவர் பாட வேண்டியது:*

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்;

**மறுமொழி: அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.**

குரு: தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்;

**மறுமொழி: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.**

*எல்லாரும் எழுந்து நிற்க, குருவானவர் சொல்லவேண்டியது:*

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக;

**மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

குரு: கர்த்தரைத் துதியுங்கள்:

**மறுமொழி: கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.**

பின்வரும் சங்கீதம் பாடவேண்டும்

Venite, Exultemus Domino 95 சங்கீதம்

**1. கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி நம்முடைய இரட்சணியக் கன்மலையை சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.**

**2. துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.**

**3. கர்த்தரே மகா தேவனும்: எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.**

**4. பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது: பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.**

**5. சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார். வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.**

**6. நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக: நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடக்கடவோம் வாருங்கள்.**

**7. அவர் நம்முடைய தேவன்: நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.**

**8. இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்: வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினபடுத்தாதேயுங்கள்:**

**9. அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.**

**10. நாற்பது வருஷமாய் நான் அந்த சந்ததியை ஆரோசித்து; அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி.**

**11. என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று; என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.**

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக:

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

அந்நாளுக்குரிய சங்கீதம் மாறி மாறி வாசித்தல்.

வாசித்த பிறகு

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக:

**மறுமொழி: ஆதியிலும் இப்பொழுது எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

முதலாம் திருமறைப் பாடம்: பழைய ஏற்பாடு

இரண்டாம் திருமறைப் பாடம்: நிருப்பாடம்

## Te Deum Laudamus

**1. தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப் படுத்துகிறோம்.**

**2. நித்திய பிதாவாகிய உம்மை: பூமண்டலமெல்லாம் வணங்கும்.**

**3. தேவதூதர் அனைவோரும்: பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்.**

4. கேரூபின்களும் சேராபின்களும்: தேவரீரை ஓயாமல் புகழ்ந்து போற்றி.

5. சேனைகளின் தேவனாகிய கர்த்தரே: நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்;

6. வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால்: நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

7. அப்போஸ்தலராகிய மாட்சிமைபொருந்திய கூட்டம்: உம்மைப் போற்றும்.

8. தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம்: உம்மைப் போற்றும்.

9. இரத்தச்சாட்சிகளாகிய தைரிய சேனை: உம்மைப் போற்றும்.

10. அளவில்லாத மகத்துவமுள்ள: பிதாவாகிய தேவரீரையும்,

11. வணங்கப்படத்தக்க மெய்யான: உம்முடைய ஒரே குமாரனையும்

12. தேற்றரவாளனாகிய: பரிசுத்த ஆவியையும்.

13. உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை பிரஸ்தாபப்படுத்தும்.

14. கிறிஸ்துவே: தேவரீர் மகிமையின் ராஜா.

15. நீரே பிதாவினுடைய: நித்திய சுதன்.

16. நீர் மனிதரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது: கன்னியா ஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

17. நீர் மரணத்தின் கொடுமையை வென்று: விசுவாசிகள் எல்லாருக்கும் மோட்ச ராஜ்யத்தைத் திறந்தீர்.

18. நீர் பிதாவின் மகிமையிலே: தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

19. நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக: வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

20. உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட: உமது அடியாருக்கு சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்.

21. எங்களை நித்திய மகிமையிலே: உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

22. கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து: உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

23. அவர்களை ஆண்டுகொண்டு: என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

24. தினம் தினம்: உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

25. எப்பொழுதும் சதாகாலங்களிலும்; உமது நாமத்தை வணங்குகிறோம்.

26. ஆண்டவரே, இந்நாளில் பாவஞ்செய்யாதபடி: எங்களைக் காத்தருளும்.

27. கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்: எங்களுக்கு இரங்கும்.

28. கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால்: உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

29. கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன்: நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

அல்லது பின்வரும் கீதத்தைப் பாடலாம்.

## Benedicite, Omnia Opera

1. கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

2. கர்த்தருடைய தூதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

3. வானங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

4. ஆகாயவிரிவின்மேலுள்ள ஜனங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

5. கர்த்தருடைய சகல வல்லமைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

6. சூரிய சந்திரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

7. வானத்தின் நட்சத்திரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

8. மழையே, பனியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

9. தேவனுடைய காற்றுக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

10. அக்கினியே, உஷ்ணமே: கர்த்தரை போற்றி புகழ்ந்து என்றென்றைக்கும் அவரை துதியுங்கள்.

11. மாரிகாலமே, கோடைகாலமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

12. மூடுபனியே, ஆலங்கட்டியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

13. பனிக்கட்டியே, குளிரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

14. உறைந்த நீரே, உறைந்த மழையே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

15. இரவே, பகலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

16. ஒளியே, இருளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

17. மின்னல்களே, மேகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

18. பூமியானது கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதிக்க கடவது.

19. மலைகளே, குன்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

20. பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

21. நீரூற்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

22. சமுத்திரங்களே, நதிகளே, கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

23. மகா மச்சங்களே, நீர்வாழும் சகல ஜெந்துக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

24. ஆகாயத்துச் சகல பறவைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

25. காட்டுமிருகங்களே, நாட்டுமிருகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

26. மனுமக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

27. இஸ்ரவேலர் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதிக்க கடவர்கள்.

28. கர்த்தருடைய ஆசாரியர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

29. கர்த்தருடைய ஊழியக்காரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

30. நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

31. பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

32. அனனியாவே, அசரியாவே, மிகாவேலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக:

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

மூன்றாம் திருமறைப் பாடம்: நற்செய்திப்பாடம்

1. பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள் மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

2. கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்: நாம் அவருடைய ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம்.

**3. அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து: அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.**

**4. கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்: அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.**

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக.**

**ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

*இப்பொழுது ஆராதனை நடத்துகிறவரும் ஜனங்களும் நின்றவாறு விசுவாசப் பிரமாணத்தைப் பாட அல்லது சொல்லவேண்டும். பரிசுத்த அதநாஷியஸ் விசுவாசப் பிரமாணம் வாசிக்கும்படி குறிக்கப்பட்ட நாட்களில் மாத்திரம் இதைச் சொல்லவேண்டியதில்லை.*

**வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்:**

**அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்: பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.**

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீர உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

பின்பு, எல்லோரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டிருக்க, ஜெபங்கள் முறையே வரும். அதற்குமுன் ஆராதனை நடத்துகிறவர் உரத்த சத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக;

**மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.**

ஆராதனை நடத்துகிறவர்: ஜெபம் பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்

**கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்**

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்

இப்பொழுது ஆராதனை நடத்துகிறவரும் பணிவிடைக்காரரும் ஜனங்களும் உரத்த சத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும்.

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும், எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.**

இப்பொழுது குருவானவர் எழுந்து நின்று சொல்லவேண்டியது.

கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்:

**மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.**

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்;

**மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப் படுத்தும்.**

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

**மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.**

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

**மறுமொழி: தேவரீரேயல்லாமல், எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.**

குரு: பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்.

**மறுமொழி: உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாதேயும்.**

*இப்பொழுது மூன்று சுருக்க ஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம். இரண்டாவது சமாதானத்துக்காகச் சொல்லுகிறஜெபம். மூன்றாவது, சன்மார்க்கமாய் நடக்கிறதற்கு வேண்டிய கிருபைக்காகச் சொல்லுகிற ஜெபம். எல்லாரும் முழங்குகால்படியிட்டிருக்க இரண்டாம், மூன்றாம் சுருக்க ஜெபங்களை வருஷ முழுவதும் நாள்தோறும் மாறாமல் காலை ஜெபத்தில் பின்வருகிறபடி சொல்லவேண்டும்.*

## இரண்டாம் சுருக்க ஜெபம்
## சமாதானத்துக்காகச் சொல்லியது

சமாதானத்துக்கு காரணரும் ஏகசிந்தையை விரும்புகிறவருமாகிய தேவனே, உம்மை அறிவதே நித்திய ஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய் சுயாதீனம், தேவரீரைத் தஞ்சமாகக் கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள் எந்த விரோதிகளுடைய வல்லமைக்கும் பயப்படாதிருக்கும்படியாக, எங்கள் சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களிலும் இருந்து எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமென்.

## மூன்றாம் சுருக்க ஜெபம்
## தேவகிருபைக்காகச் சொல்லியது

சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, இந்நாள்வரையும் எங்களை சுகமாய் நடத்திவந்த எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கும் உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## குருமாருக்காகவும், சபையாருக்காகவும்
## சொல்லிய ஜெபம்

மகா அதிசயங்களை செய்கிற சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் அத்தியட்சர்மார்மேலும், குருமார்மேலும், அவர்கள்

விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லா சபைகள் மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு உத்தம பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள் மேல் ஓயாமல் பெய்யச் செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காக குருவானவர் வழங்க வேண்டிய ஜெபம்.

ஆயர்: எல்லா மனுஷரையும் சிருஷ்டித்தவரும் காப்பாற்றுகிறவருமாகிய பராபரனே, எவ்வகையும் எந்த நிலைமையிலுமுள்ள மனுஷர்களுக்காக நாங்கள் தாழ்மையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். சகல தேசத்தாருக்கும் உமது இரட்சணியத்தையும், சகல ஜாதியாருக்கும் உமது வழிகளையும் தெரியப்படுத்தியருளும். விசேஷமாக, தேவரீர் பொதுவாயிருக்கிற திருச்சபைக்கு நற்சீரைத் தந்து, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற யாவரும் சத்தியமார்க்கத்திலே நடக்கவும், ஆவியின் ஒருமையிலும் சமாதானக் கட்டிலும் நீதியுள்ள நடக்கையிலும் நிலைத்து, விசுவாசத்தைப் பற்றிக் கொண்டேயிருக்கவும், அந்தச் சபையை உம்முடைய நல்லாவியினாலே நடத்தியருளவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறோம். கடைசியாக மனதையும் சரீரத்தையும் ஆஸ்தியையும்பற்றிய எவ்விதமான துன்பங்களும் அடைந்து வருத்தப்படுகிற யாவரையும் (விசேஷமாய்த் தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி எங்களைக் கேட்டுக் கொண்டவர்களையும்), பிதாவே உமது தயவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவரவர்களுடைய அவசரங்களுக்குத் தக்கதாகத் தேவரீர் ஆறுதலையும் சகாயத்தையும் அருளிச்செய்து, உபத்திரவப்படுகையில் அவர்கள் பொறுமையாயிருக்கவும், அவர்கள் துன்பங்களெல்லாம் இன்பமாய் முடியவும் கட்டளையிட்டருளவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*(தங்களுக்காக ஜெபம் பண்ணும்படி சபையார் யாராகிலும் கேட்டுக்கொள்ளும்போது இதைச் சொல்லவேண்டும்)*

பொதுவான ஸ்தோத்திரம் ஜெபம் அனைவரும் சேர்ந்து சொல்ல வேண்டும்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, சர்வ ஜீவதயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும் விசேஷமாய் இப்பொழுது உம்மிடத்தில் பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்காக நன்றியறிதலான ஸ்தோத்திரங்களைச் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும், தேவரீர் அருளிச் செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும் உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலைமதியாத உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவம், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்துகொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும், எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

## பரிசுத்த கிறிசோஸ்தம் என்பவருடைய ஜெபம்

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே, இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள்

விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி, இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும் தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

**பாமாலை**

**ஜீவனுள்ள தேவனின், ஆவியே வாரும் (2)**

நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்

ஜீவனுள்ள தேவனின், ஆவியே வாரும்

அருளுரை

அனைவரும் எழுந்து நிற்க:

ஆயர் அருளுரை ஆற்றிய பிறகு அருளுரை மேடையிலிருந்தே திருமேசையை நோக்கி சொல்வது. இப்போதும் தந்தைக்கும், மைந்தனுக்கும் தூய ஆவிக்கும் சகல கனமும் மகிமையும் துதியும் ஸ்தோத்திரமும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதா காலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

மனிதர் உங்கள் நற்செயல்களை கண்டு விண்ணிலிருக்கிற உங்கள் தந்தையை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது.

கீர்த்தனை: (உறைகளைப் படைத்தல்)

அறிவிப்புகள்:

கீர்த்தனை: பை காணிக்கை சேகரித்தல்

காணிக்கை வாங்கிய பிறகு கீழ்காணும் இரண்டு (அ) மூன்று ஜெபம் செய்ய வேண்டும்.

கர்த்தாவே, சாவுக்கினமான இந்த ஜீவகாலத்தில் மாறிமாறி வருகிற சுகதுக்கங்களிலெல்லாம் உமதடியாராகிய நாங்கள் உமது சம்பூரண கிருபையினாலும் சகாயத்தினாலும் எப்பொழுதும் காக்கப்படும்படி, இப்பொழுது நாங்கள் செய்கிற விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் இரக்கமாய்க் கேட்டு, நாங்கள் நித்திய இரட்சிப்பைப் பெறத்தக்கதாக, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களை வழிநடத்தியருளும். ஆமென்.

SPC

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரப்பிரகாரமாகவும் ஆத்துமப்பிரகாரமாகவும் உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி, உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்றகிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி, ஆண்டு நடத்த வேண்டுமென்று எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய நாமத்துக்குக் கனமும் புகழும் உண்டாவதற்கு ஏதுவாக நன்னடக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்திலே பதித்தருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும், நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே; நாங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக் கூடாதவைகளையும் குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவை களையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

உம்முடைய குமாரனின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்போம் என்று வாக்கருளியிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, இப்பொழுது உம்மை நோக்கி ஜெபங்களையும் வேண்டுதல்களையும் செய்திருக்கிற எங்களுக்கு இரக்கமாய்ச் செவிக்கொடுத்து, நாங்கள் உமது சித்தத்துக்கு ஏற்றபடி விசுவாசமாய்க் கேட்கிறவைகள் சம்பூரணமாய்க் கிடைப்பதினால் எங்கள் அவசரம் தீரவும், உம்முடைய மகிமை விளங்கவும் அவைகளைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## ஆசீர்வாதம்

தேவனுடைய இரக்கமுள்ள, கிருபைக்கும், பராமரிப்புக்கும் உங்களையும் ஒப்புவிக்கிறோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து, உங்களை காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணி உங்கள் மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள் மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும், எப்பொழுதும் உங்களுக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென். ஆமென். ஆமென்.

முடிவு பாமாலை.

# ஞானஸ்நானம்
# (Adult Baptism)

*ஞானஸ்நானம் பெறவிருப்போர் முன்பு ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லையென்று குரு முன்னதாகவே கேட்டறிய வேண்டும்.*

## திருவசனபோதனை

ஜனங்கள் ஞான தீட்சை கொடுக்கும் இடத்தில் கூடிவந்திருக்கும் போதாவது: அல்லது அவ்விடத்திற்குச் செல்லும் போதாவது ஒரு பாட்டுப் பாடலாம். பின் குரு சொல்லவேண்டியது:

நம்முடைய சகாயம் ஆண்டவரின் நாமத்தில் உள்ளது:

வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.

## ஜெபம் செய்வோம்

இஸ்ரவேலரின் மேய்ப்பராகிய எல்லாம் வல்ல கடவுளே, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து நீர் தெரிந்துகொண்ட ஜனத்தை விடுவித்து அவர்களோடு உறுதியான உடன்படிக்கை செய்தீர். உம்முடைய நிறைவான இரக்கத்தை உமது மந்தையின்மேல் பொழிந்தருளி, உம்முடைய திவ்விய சுதந்திரத்திற்குள் ஞானஸ்நானத்தின் மூலமாய்ச் சேர்க்கப்படப்போகிற இவர்களை உமது கிருபையின் உடன்படிக்கை மூலமாய்ப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியருளும். இவர்கள் உம்முடைய திருமைந்தனும் எங்கள் மீட்பருமான இயேசுகிறிஸ்துவில் தேவரீர் எங்களுக்கு அருளிச் செய்த நித்திய ஜீவனின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று, உம்மோடும் தூய ஆவியோடும் ஒரே கடவுளாக என்றென்றும் வீற்றிருந்து அரசாளுகிற அவர் மூலமாய் வேண்டுகிறோம். ஆமென்.

**சபையார் உட்காரலாம்**

பிரியமானவர்களே, கிறிஸ்துவின் கட்டளையின்படி, இவர்கள் கிறிஸ்துவின் உறுப்பினராகவும், கடவுளின் பிள்ளைகளாகவும், விண்ணரசின் சுதந்தரருமாகவும் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க இங்குக் கூடிவந்துள்ளோம்.

ஆதலால், நமது ஆண்டவரும் மீட்பருமான இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்:

நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். மத். 28 : 19.

ஒருவன் தண்ணீராலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுள் இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமாட்டான். யோ. 3 : 5

ஞானஸ்நானத்தைக் குறித்து அப்போஸ்தலர் கூறிய திருவசனத்தையும் கேளுங்கள்:

நீங்கள் மனந்திரும்பிப் பாவமன்னிப்புக்கென்று ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அப். 2 : 38.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம். ஆகவே பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி ஞானஸ்நானம் மூலமாய் அவரோடு மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டோம். ரோ. 6 : 3, 4.

நாம் யூதராயினும் கிரேக்கராயினும், அடிமைகளாயினும் சுயாதீனராயினும் எல்லோரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம். ஒரே ஆவியில் தாகந்தீர்க்கப்பட்டோம். I கொரி. 12 : 13.

அல்லது குரு தம் சொந்தச் சொற்களில் ஞானஸ்நானத்தைப்பற்றித் திருமறைப் போதனையை எடுத்துக் கூறுவார்.

அவர் சொல்லுவது:

மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவேண்டுமென்ற அழைப்பை நீங்கள் கேட்டீர்கள். ஆதலால் உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து, கிறிஸ்துவின் பெயரால் ஞானஸ்நானம் பெறுங்கள். உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். உங்களில் நற்செயலைச் செய்ய தொடங்கியவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாளில் நிறைவு செய்வார்.

## வெறுத்து விடுதல்

எல்லோரும் எழுந்து நிற்க, குரு ஞானஸ்நானம் பெறவிருப்போருக்குச் சொல்லுவது:

நீங்கள் இப்பொழுது ஞானஸ்நானம் பெறவந்திருக்கிறதினால் நான் உங்களிடம் கேட்கிறகேள்விகளுக்கு, கடவுளுக்கும் அவருடைய சபைக்கும் முன்பாக உண்மையாக மறுமொழி சொல்லுவது அவசியம்.

நீ பிசாசின் கிரியைகள் யாவையும் (விக்கிரக வணக்கத்தையும்) வெறுத்துவிடுகிறாயா ?

**மறுமொழி: நான் அவைகளை வெறுத்துவிடுகிறேன்.**

நீ இவ்வுலகத்தின் பெருமைகளையும், வீண் ஆடம்பரத்தையும் வெறுத்துவிடுகிறாயா ?

**மறுமொழி: நான் அவைகளை வெறுத்துவிடுகிறேன்**

.நீ தூய்மைக்கேடு, சண்டை போடுதல், இச்சை முதலிய மாமிசத்திற்குரிய பாவங்களை வெறுத்துவிடுகிறாயா ?

**மறுமொழி: நான் அவைகளை வெறுத்துவிடுகிறேன்.**

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய ஒரே கடவுளை நீ விசுவாசிக்கிறாயா ?

**மறுமொழி: ஆம் ஒரே கடவுளை விசுவாசிக்கிறேன்.**

## வாக்குறுதிகள்

பின்னும் குரு தொடர்ந்து சொல்லுதல்:

இந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம் பெறவிரும்புகிறாயா ?

**மறுமொழி; அதையே விரும்புகிறேன்.**

கடவுளின் திருச்சித்தத்தையும், கற்பனையையும் கைக்கொண்டு உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடக்க முயற்சி செய்வாயா ?

மறுமொழி: தேவ கிருபையினால் அப்படியே செய்வேன்.

ஞானஸ்நானம் பெறுவோர் கணவனும், மனைவியுமாக இருந்தால் குரு அவர்களிடம் சொல்லுவது:

கிறிஸ்துவின் போதனைக்குக் கீழ்ப்பட்டு, அன்பினால் ஒன்றாய் நிலைத்திருந்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் உங்கள் பிள்ளைகளை வளர்த்து வருவீர்களா ?

கணவனும் மனைவியும் சேர்ந்து:

**மறுமொழி: தேவ கிருபையினால் அப்படியே செய்வோம்.**

ஞானஸ்நானம் பெறுவோர் அனைவரையும் நோக்கி குரு சொல்லுவது:

பெருமை, பிரிவினை, பாவ ஆசை ஆகிய தீய ஆவி உங்களை இது முதல் ஒருபோதும் ஆட்கொள்ளாதிருக்க, எல்லாம் வல்ல கடவுள் கிருபை செய்வாராக. ஏனென்றால் கிறிஸ்து தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உங்களைக் கிரயத்திற்குக் கொண்டிருக்கிறார். உங்கள் ஞானஸ்நானத்தால் இருளின் வல்லமையிலிருந்து உங்களை இரட்சித்து, ஒளியின் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவரது குரலைக் கேட்க உங்கள் செவிகள் திறந்திருப்பதாக. உங்கள் வாய் அவருடைய திருநாமத்தை அறிவிப்பதாக. பிதா, குமாரன் பரிசுத்த ஆவியாகிய ஒரே கடவுளாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகின்றவர் அவரே. ஆமென்.

## ஞானஸ்நானம்

குரு:

ஞானஸ்நானம் பெறுவோர் கடவுளுடைய கிருபையின் பரிபூரணத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அவர்களுக்காக மௌனமாக ஜெபம் செய்வோம்.

எல்லோரும் முழங்காலில் நிற்க, மௌன ஜெபத்திற்குப் பின் குரு சொல்லுவது:

கர்த்தர் உங்களோடிருப்பாராக:

*அவர் தம் சொந்த வார்த்தையில் ஜெபம் செய்யலாம்.*

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய ஜீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவனே, எங்கள் உத்தியோகத்தினாலும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறயாவரும் பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு, நித்திய பலனை அடையும்படி உமது இரக்கத்தினாலே கிருபை செய்தருளும். ஆமென்.

நித்திய ஜீவியாகிய சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, தமது அருமையான விலாவிலிருந்து தண்ணீரையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டருளினாரே, தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த தண்ணீரை பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இந்தப் பிள்ளை உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவனாய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அனுக்கிரகத்தருளும். ஆமென்.

*அப்பொழுது குருவானவர் பிள்ளையைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டியது.*

இந்தப் பிள்ளைக்குப் பேரிடுங்கள்.

*அப்பொழுது அவர்கள் இடுகிறபேரை அவர் சொல்லி, பிள்ளை ஜலத்தில் முழுக்காட்டத் தாங்குமென்று அவர்கள் சொன்னால் பத்திரமாய் முழுக்காட்டிச் சொல்லவேண்டியது.*

*பின்பு யாவரும் நின்று கொண்டிருக்க, குரு ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொருவரின் பெயரைக் கேட்டுக்கொண்டு அவரைத் தண்ணீரில் முழுக்கி அல்லது அவர்மேல் தண்ணீர் வார்த்துச் சொல்லுவது:*

(பெயர்)..................... பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவர் பேரிலும் குரு சொல்லுவது:

இவரை கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு இவர்மேல் சிலுவை அடையாளத்தை வரைகிறோம்.

*குரு ஞானஸ்நானம் பெற்றவர் அனைவருக்காகவும் சொல்லுவது:*

**சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவர் (இவர்கள்) அறிக்கையிட ஒருபோதும் வெட்கப்படாமல், வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் உண்மையுள்ள தொண்டராக (தொண்டர்களாக) நிலைத்திருப்பாராக (நிலைத்திருப்பார்களாக). ஆமென்.**

*பின்வரும் ஆசீர்வாதத்தைச் சொல்ல அல்லது பாடலாம்.*

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து காக்கக்கடவர்; கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்கள் மேல் கிருபையாய் இருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென் எண். 6 : 24 - 26.

*துதிப்பாட்டு: ஞானஸ்நானம் பெற்ற இடத்திலிருந்து ஆலயத்தினுள் பவனியாகப் போகலாம்.*

*இச்சமயத்தில், குரு ஞானஸ்நானம் பெறுவோரின் நெற்றியில் சிலுவை அடையாளத்தை வரையலாம்.*

## தீபம் பிடித்தல்

*புதிதாக ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு எரிகிற விளக்குகளை அல்லது மெழுகுவர்த்திகளைக் கொடுக்கலாம். அவர்கள் அவைகளை பெற்றபின் குரு சொல்லவேண்டியது.*

**மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் காணும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது:**

**பரலோகத்திலிருக்கிற நமது பிதாவை மகிமைப்படுத்தும்படி அப்படிப் பிரகாசிக்கக்கடவது:**

*அல்லது சுருக்கமான வேறு முறையாய், சில வாசகங்களை வழங்கலாம்.*

*குரு அல்லது குருவும் சபையாரும் சேர்ந்து சொல்லுவது:*

**மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, உமது அடியார்களாகிய இவர்களைப் புத்திர சுவிகாரத்தினால் உமது சொந்தப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு, உமது பரிசுத்த சபையில் ஒன்றுபடுத்தினதற்காக முழு இருதயத்தோடே உமக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். இவர்கள் உமது கிருபையால் இப்போது உம்முடைய பிள்ளைகளாயிருப்பதைத் தங்கள் வாழ்க்கையில் மேன்மேலும் காட்ட**

இவர்களுக்கு அருள்புரியும். இவர்கள் உம்முடைய திருமைந்தனின் மரணத்திற்குப் பங்குள்ளவர்களாய் இருக்கிறதுபோல அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவர்களாயிருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய இராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகவும் தேவரீர் கிருபை செய்ய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டுகிறோம். ஆமென்.

SPC

# குழந்தைகள் ஞானஸ்நானம்
# (Infant Baptism)

*குழந்தைப் பேற்றுக்குப்பின் நன்றிசெலுத்துதல்*

இந்நன்றி செலுத்துதல் சபையின் ஒரு பொது ஆராதனையில் செய்யப்பட வேண்டும். சங்கீதம் வாசிக்கும்போதும், கர்த்தருடைய ஜெபம் சொல்லும்போதும் சபையார் சேர்ந்து சொல்லவேண்டும்.

புதிதாய்ப் பிறந்த குழந்தையைக் கொண்டுவரும் தந்தையும் தாயும் திருமேஜையின் முன் அல்லது வசதியான வேறொரு இடத்தில் முழங்காற்படியிட, குரு அவர்களைப் பார்த்துச் சொல்லுவது:

எல்லாம் வல்ல கடவுள் இக்குழந்தையை ஈவாகத் தந்ததினால் உங்களுக்கு நன்மை அருளியுள்ளார். ஆகையால் அவருக்கு நாம் நன்றி செலுத்துவோம்.

குருவும் பெற்றோரும், சபையாரோடு சேர்ந்து, பின்வரும் சங்கீதத்தை முறைமுறையே வாசிக்கவேண்டும். சங். 145 : 1- 8.

இராஜாவாகிய, என் கடவுளே, உம்மை உயர்த்திப் பாடுவேன், உமது நாமத்தை எப்பொழுதும் என்றென்றும் தோத்தரிப்பேன்.

நாடோறும் உம்மைத் தோத்தரிப்பேன்; உமது நாமத்தை எப்பொழுதும் துதிப்பேன்.

கர்த்தர் மகத்துவமானவர், மிகவும் துதிக்கப்படத்தக்கவர்; அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.

ஒரு தலைமுறை, வருந்தலைமுறைக்கு உமது செய்கைகளின் புகழைச் சொல்லும், உமது வல்ல செயல்களை அறிவிக்கும்.

உமது மகத்துவத்தின் மகிமையையும் மேன்மையையும், உமது அதிசயமான கிரியைகளையும் தியானிப்பேன்.

ஜனங்கள் உமது பயங்கரமான செயல்களின் வல்லமையைப்பற்றிப் பேசுவார்கள்; உமது மகத்துவத்தை நான் விவரிப்பேன்.

அவர்கள் உமது மிகுந்த தயாளத்தை நினைத்துப் பிரசித்தம் செய்வார்கள், உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள்.

கர்த்தர் இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டாவதாக:

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

## ஜெபம் செய்வோம்

கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்:

**கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்:**

கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்

**பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும், எங்களை சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.**

எல்லாம் வல்ல கடவுளே, உமது அடியாளாகிய இப்பெண்ணுக்குச் சுகமும் மகிழ்ச்சியுமான பிள்ளைப்பேற்றை உமது அன்பினாலும் இரக்கத்தினாலும் அருளினதற்காக உமக்கு இருதயப் பூர்வமான நன்றியைச் செலுத்துகிறோம். அவள் பேரிலுள்ள உமது கரிசனையையும் அன்பையும் அவள் நினைத்து, உமக்கு இடையுறாது நன்றி செலுத்தவும், உம்மை உண்மையாய்ச் சேவிக்கவும் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மூலம் அருளிச் செய்தருளும். ஆமென்.

எங்கள் பரலோகத் தந்தையாகிய கடவுளே, உமது ஆக்கல் சக்தியாலும் அன்பினாலும் இப்பெண்ணுக்குப் பிள்ளைப் பேறாகிய ஈவு அருளப்பட்டது. இவளுக்கும் இவள் வாழ்க்கைத் துணைவருக்கும் ஞானமும் ஆலோசனையும் அளித்து, இவர்கள் தங்கள் குழந்தையை நித்திய ஜீவனுக்கான பாதையில் வழி நடக்கச் செய்யும் ஆற்றலை பெற எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் உதவியருளும். ஆமென்.

*பெற்றோர் சொல்வது:*

**எங்கள் பிதாவாகிய கடவுளே, நீர் எங்களுக்குத் தந்தருளின குழந்தைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் சமாதானத்திலும் ஒரு குடும்பமாக ஒன்றாய் நாங்கள் வாழ உதவியருளும். நாங்கள் அனைவரும் உம்மை நேசித்து, உம்மை உண்மையாய்ச் சேவிக்க எங்களுக்கு ஞானம் தந்து, நாங்கள் நல்ல பெற்றோராய் விளங்க எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் அருள் செய்தருளும். ஆமென்.**

*குழந்தை இறந்துபோயிருந்தால்,சங் 148: 1-8க்குப் பதிலாக சங். 63 : 1 - 8ஐ வாசிக்கவேண்டும். மேல்குறிப்பிட்ட மூன்று ஜெபங்களுக்குப் பதிலாக குருவானவர் மட்டும் பின்வரும் ஜெபத்தைச் சொல்லவேண்டும்.*

எல்லாம் வல்ல கடவுளே, பிரசவத்தில் நேரிடக்கூடிய எல்லா அபாயங்களிலிருந்தும் உமது அடியாளைக் காத்து இன்று உமது ஆலயத்தில் மீண்டும் வரத்தக்கதாக அருள் செய்தபடியால் உம்மைத் தாழ்மையோடு துதிக்கிறோம். அன்புள்ள பிதாவே, இவளையும் இவள் வாழ்க்கைத் துணைவரையும் துக்கத்தில் ஆறுதல்படுத்தி, விசுவாசத்தில் நிலைத்திருக்கவும், உமது சித்தத்தைச் செய்யவும். தாங்கள் வாழ்நாட்களின் முடிவில் நித்திய ஜீவனின் மகிமையை அடையவும் இவர்களைப் பலப்படுத்தியருள எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*குருவானவர் கீழ்க்கண்ட ஆசீர்வாதத்தைக் கூறி அவர்களை அனுப்பிவிடலாம்.*

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய சர்வ வல்லமையுள்ள கடவுளின் ஆசீர்வாதம் உங்கள் போக்கிலும், உங்கள் வரத்திலும், உங்கள் உட்காருதலிலும், உங்கள் எழுந்திருக்குதலிலும், உங்கள் பேச்சிலும், உங்கள் அமைதியிலும், உங்கள் ஜெபங்களிலும், உங்கள் வேலைகளிலும், உங்கள் இல்லத்திலும் அங்குள்ள உங்கள் கூட்டுறவிலும் இன்றும் என்றும் இருப்பதாக. ஆமென்.

*பெற்றோர் ஒரு நன்றியறிதல் காணிக்கை படைக்கலாம். திருவிருந்து ஆராதனை நடைபெற்றால் அவர்கள் சேர்ந்து அதில் பங்குபெறலாம்.*

ஞானஸ்நானம் பெறவிருக்கும் குழந்தைகள், முன்பு ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லையென்று குரு முன்னதாகவே கேட்டறிய வேண்டும்.

## திருவசனப்போதனை

*ஜனங்கள் ஞானத்தீட்சை கொடுக்கும் இடத்தில் கூடிவந்திருக்கும் போதாவது அல்லது அவ்விடத்திற்குச் செல்லும்போதாவது ஒரு பாட்டுப் பாடலாம். பின் குரு சொல்லுவது:*

நம்முடைய சகாயம் ஆண்டவரின் நாமத்தில் உள்ளது.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.

## ஜெபம் செய்வோம்

இஸ்ரவேலரின் மேய்ப்பராகிய எல்லாம் வல்ல கடவுளே, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து நீர் தெரிந்துகொண்ட ஜனத்தை விடுவித்து அவர்களோடு உறுதியான உடன்படிக்கை செய்தீர். உம்முடைய நிறைவான இரக்கத்தை உமது மந்தையின்மேல் பொழிந்தருளி, உம்முடைய திவ்விய சுதந்திரத்திற்குள் ஞானஸ்நானத்தின் மூலமாய்ச் சேர்க்கப்படப் போகிற இக்குழந்தைகளை உமது கிருபையின் உடன்படிக்கை மூலமாய்ப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியருளும். இவர்கள் உம்முடைய திருமைந்தனும் எங்கள் மீட்பருமான இயேசுகிறிஸ்துவில் தேவரீர் எங்களுக்கு அருளிச் செய்த நித்திய ஜீவனின் வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கிருபை செய்ய வேண்டுமென்று உம்மோடும் தூய ஆவியோடும் ஒரே கடவுளாக என்றென்றும் வீற்றிருந்து அரசாளுகிறஅவர் மூலமாய் வேண்டுகிறோம். ஆமென்.

*சபையார் உட்காரலாம்*

பிரியமானவர்களே, கிறிஸ்துவின் கட்டளையின்படி, இக்குழந்தைகள் கிறிஸ்துவின் உறுப்பினராகவும், கடவுளின் பிள்ளைகளாகவும், விண்ணரசின் சுதந்தரராகவும் இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க இங்குக் கூடிவந்துள்ளோம்.

ஆதலால், நமது ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள்.

நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். மத். 28 : 19.

ஒருவன் தண்ணீராலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் கடவுள் இராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமாட்டான். யோ. 3 : 5.

புனிதர் மார்க்குவின் சுவிசேஷத்தில் எழுதியிருப்பதையும் கேளுங்கள்.

சிறு பிள்ளைகளை அவர் தொடும்படி அவரிடம் கொண்டுவந்தார்கள்; கொண்டு வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசுவோ அதைக் கண்டு விசனப்பட்டு; சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள்; கடவுள் இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. கடவுள் இராஜ்யத்தைச் சிறுபிள்ளையைப்போல் ஏற்றுக்கொள்ளாதவன் எவனும் அதில் பிரவேசிப்பதேயில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார். மா. 10 : 13 - 16.

அல்லது குரு, தம் சொந்தச் சொற்களில் ஞானஸ்நானத்தைப்பற்றித் திருமறைப் போதனையை எடுத்துக்கூறுவார்.

அல்லது அவர் சொல்லுவது:

இந்த சுவிசேஷ வாக்கியத்தில் நம்முடைய மீட்பராகிய கிறிஸ்து பிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டுவரக் கட்டளையிட்டபோது சொன்ன வார்த்தைகளை நீங்கள் கேட்டீர்கள் அவர்களைத் தம்முடைய கைகளில் ஏந்தி ஆசீர்வதித்தாரென்று நீங்கள் அறிகிறீர்கள். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர், ஆகையால் அவர் இந்த பிள்ளைகளை நேசிக்கிறாரென்றும், இவர்களை ஏற்றுக்கொள்ளவும். தம்முடைய இரக்கமுள்ள கரங்களினால் அணைத்துக்கொள்ளவும். இவர்களுக்கு நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தை அருளவும் ஆயத்தமாயிருக்கிறார் என்றும் விசுவாசியுங்கள்.

இந்தச் சிறுபிள்ளைகள் உங்களுடன் கடவுளுக்குச் சொந்தமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் உறுப்பினராகவும், பரலோக இராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகவும் இவர்கள் வளர்ச்சியடையும்படி பரிசுத்த ஞானஸ்நானத்தில் விசுவாசக் குடும்பத்தாருடனும் வீட்டாருடனும் அவர் இணைக்கிறார்.

## விசுவாச அறிக்கை

எல்லாரும் எழுந்து நிற்க, குரு பிள்ளைகளின் பெற்றோரையும் (ஞானப்பெற்றோரையும்) பார்த்துச் சொல்லுவது:

ஞானஸ்நானம் பெறுவதற்குப் பிள்ளைகளைக் கொண்டு வருபவர்கள் ஞானஸ்நானத்துக்குரிய விசுவாசத்தை அறிக்கை செய்வதும், கிறிஸ்துவின் வழியில் அவர்களை வளர்க்க வாக்குக் கொடுப்பதும் அவர்கள் கடமையாகும்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய ஒரே கடவுளை நீ விசுவாசிக்கிறாயா ?

**மறுமொழி: ஆம், ஒரே கடவுளை விசுவாசிக்கிறேன்.**

அப்படியானால், நாம் நமது விசுவாசத்தை அறிக்கையிடுவோமாக.

பின்பு எல்லோரும் சேர்ந்து அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும். ஏற்கனவே சொல்லியிருந்தால் இதை தவிர்க்கலாம்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில், பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்தாவியை விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீர உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

## வாக்குறுதிகள்

இந்தக் குழந்தை கிறிஸ்தவக் குடும்பத்தில் வளரவும், இவன் கிறிஸ்துவைத் தன் மீட்பராக அறிந்துக்கொள்ளத்தக்கதாகத் திருச்சபையின் போதனையிலும், வழிபாட்டிலும், வளர்க்கப்படவும் முயற்சி செய்வீர்களா ?

**மறுமொழி: கடவுளுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வோம்.**

இந்தக் குழந்தைக்கு இடறல் உண்டாக்காதபடி உங்கள் வாழ்க்கையை ஒழுங்காக நடத்த முயற்சி செய்வீர்களா ?

**மறுமொழி: கடவுளுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வோம்.**

இவன் பரிசுத்த ஆவியினால் விசுவாசத்தில் வேரூன்றி, கர்த்தரின் பந்தியில் பங்கு பெறவும், திருச்சபையின் அன்னியோந்நியத்தில் கடவுளை உண்மையாய்ச் சேவிக்க உலகத்தில் செல்லவும் உதவியாயிருக்கும்படி இவன் பிற்காலத்தில் திருசசபையின் முழு உறுப்பினனாக (திடப்படுத்தல் பெற) நீங்கள் இவனை உற்சாகப்படுத்துவீர்களா ?

**மறுமொழி: கடவுளுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வோம்.**

*சபையாரை நோக்கி குரு சொல்லுவது:*

பிரியமானவர்களே, இவர்களும், உங்கள் மத்தியிலுள்ள ஏனைய பிள்ளைகளும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவிலும் அன்பிலும் வளருவதற்கு ஏதுகரமாயிருக்க, நீங்கள் கிறிஸ்துவின் திருச்சபையின் உறுப்பினராக உங்கள் அழைப்புக்கு உண்மையுள்ளவராயிருப்பீர்களா ?

*சபையார் மறுமொழி:*

**கடவுள் ஒத்தாசையுடன் அப்படியே நடப்போம். எங்கள் ஐக்கியத்தில் இப்பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளுகிறோம்.**

## ஞானஸ்நானம்

குரு:

இப்பொழுது ஞானஸ்நானம் பெறவிருக்கும் பிள்ளைகள் கடவுளின் பேரருளின் நிறைவைப்பெறஅவர்களுக்காக மௌனமாக ஜெபிப்போம்.

*சபையார் முழங்காற்படியிட்டு ஜெபிக்கலாம்.*

*சற்றுநேரம் அமைதி, அதன்பின் குரு சொல்லுவது:*

ஆண்டவர் உங்களோடிருப்பாராக:

**அவர் உமதாவியோடும் இருப்பாராக.**

*குரு தம் சொந்த சொற்களில் ஜெபிப்பார்.*

நித்திய ஜீவியாகிய சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தமது அருமையான விலாவிலிருந்து தண்ணீரையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் எங்கள் கட்டளையிட்டருளினாரே, தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி, ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த தண்ணீரை பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இந்தப் பிள்ளை உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று தெரிந்து கொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவனாய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

*அப்பொழுது குருவானவர் பிள்ளையைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு, ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கி சொல்லவேண்டியது:*

இந்தப் பிள்ளைக்குப் பேரிடுங்கள்.

அப்பொழுது அவர்கள் இடுகிறபேரை அவர் சொல்லி, பிள்ளை தண்ணீரை முழுக்காட்டத் தாங்குமென்று அவர்கள் சொன்னால், பத்திரமாய் முழுக்காட்டிச் சொல்லவேண்டியது:

(பெயர்)........................பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

*ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொரு பிள்ளையின் பேரிலும் குரு சொல்லுவது:*

இக்குழந்தையைக் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு இவன் (இவள்) மேல் சிலுவை அடையாளத்தை வரைகிறோம்.

குரு ஞானஸ்நானம் பெற்றவர் அனைவருக்காகவும் சொல்லுவது:

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இக்குழந்தைகள் அறிக்கையிட ஒருபோதும் வெட்கப்படாமல், வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவின் உண்மையுள்ள தொண்டராக நிலைத்திருப்பார்களாக. ஆமென்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர்: கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிராகாசிக்கப்பண்ணி உங்கள்மேல் கிருபையாய் இருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென். எண். 6 : 24 - 26.

துதிப்பாட்டு, ஞானஸ்நானம் பெற்ற இடத்திலிருந்து ஆலயத்தினுள் பவனியாகப் போகலாம்.

## தீபம் பிடித்தல்

ஞானஸ்நானம் பெற்றபிள்ளைகளின் பெற்றோரிடம் எரிகிற விளக்குகளை அல்லது மெழுகுவர்த்திகளைக் கொடுக்கலாம். அவர்கள் அவைகளைப் பெற்றபின் குரு சொல்லவேண்டியது.

மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் காணும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

பரலோகத்திலிருக்கிற நமது பிதாவை மகிமைப்படுத்தும்படி அப்படிப் பிரகாசிக்கக்கடவது. மத். 5 : 16.

அல்லது சுருக்கமான வேறு முறையாய்ச் சில வாசகங்களை வழங்கலாம்.

## நன்றி சொல்லுதல்

குரு அல்லது குருவும் சபையாரும் சேர்ந்து சொல்லுவது

மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, உமது அடியார்களாகிய இந்தக் குழந்தைகளைப் புத்திர சுவிகாரத்தினால் உமது சொந்தப் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு உமது பரிசுத்த சபையில் ஒன்றுபடுத்தினதற்காக முழு இருதயத்தோடே உமக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். இவர்கள் உமது கிருபையால் இப்போது உம்முடைய பிள்ளைகளாயிருப்பதைக் தங்கள் வாழ்க்கையில் மேன்மேலும் காட்ட இவர்களுக்கு அருள்புரியும். இவர்கள் உம்முடைய திருமைந்தனின் மரணத்திற்குப் பங்குள்ளவர்களாய்

இருக்கிறதுபோல அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவர்களாயிருக்கவும், கடைசியிலே உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய இராஜ்யத்திற்குச் சுதந்தரவாளிகளாகவும் தேவரீர் கிருபை செய்ய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டுகிறோம். ஆமென்.

குரு சொல்லுவது:

எல்லாம் வல்ல எங்கள் பரம பிதாவே, உமது பாக்கியமுள்ள குமாரன் நாசரேத்தூரில் குடும்ப வாழ்வில் பங்கு பெற்றாரே, இந்த குழந்தைகளின் இல்லங்களை நீர் ஆசீர்வதித்தருளும். இவர்கள் உம்மைப்பற்றிய இடைவிடாத பயபக்தியிலும் அன்பிலும் வளரும்படி இவர்களைப் பராமரித்துவரும் யாவருக்கும் ஞானத்தையும், அறிவையும் ஈந்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும், உமது திருமைந்தனுமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

ஒரு பாட்டு பாடலாம். தோத்திர காணிக்கை படைக்கப்படும்.

திருவிருந்திலாவது காலை மாலை ஜெபத்திலாவது ஞானஸ்நானம் நடத்தப்படாவிட்டால், குரு, இந்த ஆசீர்வாதத்தைக் கூறி, சபையாரை அனுப்புவார்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள் தமது ஆவியினாலே உள்ளான மனிதனில் உங்களை வல்லமையாய்ப் பலப்படுத்துவாராக. விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருந்து, உங்களைக் கடவுளுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பியருளுவாராக. ஆமென்.

# திடப்படுத்தல்

திருவிருந்து வழிபாடு ஆயத்தம் பக்கம் 1 - 5

குரு: திடப்படுத்தல் பெறவிருப்போரின் பெயரை வாசிக்க அவர்கள் ஒவ்வொருவராய் எழுந்து நிற்பார்கள்.

குரு:

ஆண்டவருக்குள் பிரியமானவர்களே, உங்கள் ஞானஸ்நானத்தில் நீங்கள் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டீர்கள்; கடவுளுடைய குடும்பத்தாரும் வீட்டாருமாக முத்திரையிடப்பட்டீர்கள்.

அப்பொழுது செய்யப்பட்ட பயபக்தியான உடன்படிக்கையை உறுதி செய்யவும், ஆண்டவராகிய இயேசுவில் நீங்கள் விசுவாசம் வைக்கிறதை அறிக்கையிடவும், அவருக்காக உங்களை அர்ப்பணிக்கவும், அவர் உங்களுக்கு அருளக் காத்திருக்கும் ஈவுகளைப் பெறவும், இப்பொழுது நீங்கள் சுயமாக வந்திருக்கிறீர்கள்.

அப்போஸ்தலரின் வழக்கப்படியே, யாம் உங்கள்மேல் எமது கைகளை வைத்து, தூய ஆவியானவர் உங்களை எல்லா நற்செயலிலும் பலப்படுத்த ஜெபிக்கவும், நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

கிறிஸ்துவின் திருக்கூட்டத்தாராகிய அவருடைய மக்களின் நிறைவான ஐக்கியத்திற்குள் இத்திருச்சபையார் உங்களை வரவேற்கவும், நாம் எல்லாரும் சேர்ந்து நம் வாழ்நாள் எல்லாம் அவரை ஆராதித்து சேவிக்கவும், நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

ஆதலால், தூய ஆவியின் ஈவைப்பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசியின் நூலில் அடங்கியுள்ள திருவசனத்தைக் கேளுங்கள்.

உங்களுக்குப் புதிய இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிய ஆவியை வைத்து, கல்லான இருதயத்தை உங்கள் சரீரத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்கு கொடுப்பேன். உங்கள் உள்ளங்களில் என் ஆவியை வைத்து, நீங்கள் என் நியமங்களில் நடந்து, என் தீர்ப்புகளைக் கைக்கொண்டு அவைகளில் நடக்கும்படி செய்வேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாயிருப்பேன். எசே. 36 : 26 - 28.

உரோமாபுரித் திருச்சபையினருக்கு அப்போஸ்தலர் பவுல் எழுதிய நிருபத்தில் அடங்கிய திருவசனத்தையும் கேளுங்கள்.

சகோதரரே, நாம் கடனாளிகள், மாம்சத்திற்கேற்றபடி நடப்பதற்கு ஆவியினால் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்துக்கேற்றபடி நடந்தால் நீங்கள் சாவது நிச்சயம்; சரீரத்தின் செய்கைகளை அழித்தாலோ பிழைப்பீர்கள். தேவ ஆவியினாலே நடத்தப்படுகிறவர்கள் எவர்களோ அவர்கள் தேவ புத்திரர். திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், புத்திர சுவீகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். அந்த ஆவியினாலே நாம் அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம். நாம் கடவுளின் பிள்ளைகளென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியோடு கூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்திரருமாமே. கடவுளின் சுதந்திரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாமே; அவரோடுகூட நாம் மகிமை அடைவதற்கு அவரோடு கூடப்பாடுபட்டால் அப்படியாகும். ரோ. 8 : 12 - 17.

பாமாலை

நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே கூறிய திருவசனத்தையும் கேளுங்கள்.

நீங்கள் என்னில் அன்புகூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுவீர்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களோடிருக்கும்படி சத்திய ஆவியானவராகிய வேறொரு சகாயரை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள முடியாது. அது அவரைக் காண்கிறதுமில்லை. அறிகிறதுமில்லை; நீங்களோ அவரை அறிவீர்கள். அவர் உங்களோடு வசிக்கிறார். உங்களுக்குள் இருப்பார். யோவான் 14 : 15 - 17.

பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது, நீங்கள் பலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள். அப்.1 : 8.

பாமாலை

அருளுரை ஆற்றப்படும்

## பிரதிக்கிளைகள்

*திடப்படுத்தல் பெறவிருப்போர் எழுந்து நிற்க, குரு சொல்லுவது:*

கடவுளுடைய சமூகத்திலும், இந்தச் சபையாருக்கு முன்பாகவும், நான் இப்பொழுது உங்களைக் கேட்கிறதாவது:

கிறிஸ்துவின் வல்லமையினால் நீ, இவ்வுலகத்தின் பெருமையையும், வீண் ஆடம்பரத்தையும், பாவமான மாம்ச இச்சைகளையும், பிசாசின் எல்லாச் செயல்களையும் வெறுத்துவிடுகிறாயா ?

**மறுமொழி: வெறுத்துவிடுகிறேன்.**

பிதா குமாரன் பரிசுத்தாவியாகிய ஒரே கடவுளை விசுவாசிக்கிறாயா ?

**மறுமொழி: விசுவாசிக்கிறேன்.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை உன் மீட்பராகவும், உலக மீட்பராகவும் ஏற்றுக்கொள்ளுகிறாயா ?

**மறுமொழி: ஏற்றுக்கொள்ளுகிறேன்.**

அப்படியானால் நாம் நமது விசுவாசத்தை அறிக்கை செய்வோம்.

**வானத்தையும், பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.**

**ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரேபேறான குமாரனுமாயிருக்கிற, இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே, தமது பிதாவினாலே ஜெநிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும், நமக்கு இரட்சிப்பு உண்டாகவும், பரமண்டலத்திலிருந்து இறங்கி பரிசுத்த ஆவியினாலே, கன்னிமரியாளிடத்தில் அவதரித்து, மனிதனானார். நமக்காகப் பொந்தியுபிலாத்துவின் காலத்தில், சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம் பண்ணப்பட்டார்; வேத வாக்கியங்களின்படி, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும்,**

**மரித்தோரையும் நியாயந்தீர்க்க, மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.**

**கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும், குமாரனோடும் கூடத்தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பரிசுத்த பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.**

கடவுளுடைய திருச்சித்தத்தையும், கற்பனைகளையும் கைக்கொண்டு உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடந்து கொள்வாயா ?

**மறுமொழி: தேவ ஒத்தாசையினால் அப்படியே நடந்துகொள்வேன்.**

ஆண்டவருடைய நாளின் ஆராதனையிலும், சிறப்பாகத் திருவிருந்திலும் உடன் கிறிஸ்தவர்களோடு சேர்ந்து பங்குபெற வாக்குக் கொடுக்கிறாயா ?

**மறுமொழி: வாக்குக்கொடுக்கிறேன்.**

ஜெபிப்பதிலும், திருமறையை வாசிப்பதிலும், கேட்பதிலும் உண்மையாயிருக்க வாக்குக்கொடுக்கிறாயா ?

**மறுமொழி: வாக்குக்கொடுக்கிறேன்.**

சிலுவையிலறையுண்டு, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் புற்றும் விசுவாசத்தை அறிக்கையிடுவதும், உன் வாழ்நாளெல்லாம் அவருடைய ஊழியத்தில் உண்மையாய் நிலைத்திருந்து, சொல்லிலும், செயலிலும், அவருக்குச் சாட்சியாயிருப்பதும் உன் கடமையென்று ஒப்புக்கொள்கிறாயா ?

**மறுமொழி: ஒப்புக்கொள்ளுகிறேன.**

குரு சொல்லுவது:

அன்பர்களே, நம்முடைய ஒரே இரட்சகரான கிறிஸ்துவின் மூலமாய்க் கடவுளில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, அவருக்குக்

கீழ்ப்படியவும் அவருடைய மக்களோடு ஐக்கியமாய் வாழவும் உங்கள் விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் கொடுத்த வாக்குகளை உண்மையாய் நிறைவேற்றுவதற்குப் பரிசுத்தாவியானவர் உங்களைப் பலப்படுத்தும்படி முழங்காற்படியிட்டு ஜெபியுங்கள்.

*அமைதி, யாவரும் முழங்காலில் நிற்பர்.*

குரு சொல்ல, திடப்படுத்தல் பெறுபவர் சொல்லுவது:

**கடவுளே, என் இறைவனே, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிதாவே, நான் என்னுடையவனல்லன்; உம்முடையவன்(ள்). உமது பேரருளைச் சார்ந்து, உம்முடைய பிள்ளையாக, என் வாழ்நாளெல்லாம் உம்மை உண்மையோடு நேசிக்கவும், சேவிக்கவும் நான் என்னையே உமக்கு அர்ப்பணஞ்செய்கிறேன். ஆமென்.**

## திடப்படுத்தல்

திடப்படுத்தல் பெறுவோருக்காக அமைதியாய் ஜெபிக்கச் சபையாரைக் குரு அழைப்பார்.

*சற்று நேரம் அமைதி.*

*முழங்காலில் நின்றவண்ணம் பரிசுத்த ஆவிக்காக ஒரு பாட்டு ஜெபமாகப் பாடலாம்.*

பாமாலை

*பின்வரும் ஜெபத்தைக் குரு மாத்திரம் ஏறெடுப்பார். அல்லது சபையாரும் தம்மோடு சேர்ந்து ஜெபிக்க அழைக்கலாம்.*

எல்லாம் வல்ல கடவுளே, எங்கள் பரமபிதாவே, பரிசுத்த ஞானஸ்நானத்தால் இந்த உமது பிள்ளைகளை உமது குடும்பத்தில் ஏற்றுக்கொண்டீரே. உமது பரிசுத்த ஆவியால் இவர்களை விசுவாசத்தில் நிலைநிறுத்தியருளும். ஞானம், உணர்வு, ஆலோசனை, வல்லமை, அறிவு, ஆண்டவருக்குப் பயப்படும் பயம் ஆகிய ஆவியின் பற்பல பேரருள் வரங்களை நாள்தோறும் இவர்களில் பெருகச் செய்யும். நித்திய ஜீவனுக்கென்று இவர்களை உமது இரக்கத்தால் பாதுகாத்தருளும். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

குரு தமது கையைத் திடப்படுத்தல் பெறுவோர் ஒவ்வொருவரின் தலையின்மேல் வைத்துச் சொல்லுவது:

ஆண்டவரே, இந்த உமது பிள்ளை உம்முடையவனா(ளா)க என்றைக்கும் நிலைத்திருக்கவும், உம்முடைய நித்திய இராஜ்யத்தில் சேருமளவும், நாள்தோறும் உமது பரிசுத்த ஆவியில் பெருகவும், உமது பரம கிருபையால் இவனை(ளை)ப் பலப்படுத்தியருளும். ஆமென்.

எல்லோரும் திடப்படுத்தல் பெற்றபின், குரு சொல்லுவது:

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

அவர் உமதாவியோடும் இருப்பாராக.

குரு:

எல்லாம் வல்ல நித்திய கடவுளே, உம்முடைய திருமைந்தனும் எங்கள் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் வாக்குதத்தத்தின்படியே உம்முடைய திருச்சபையைப் பரிசுத்தாவியின் ஆலயமாக நியமித்திருக்கிறீரே. நாங்கள் கைகளை வைத்த இந்த உமது பிள்ளைகளுக்காக நாங்கள் ஏறெடுக்கும் ஜெபங்களை இரக்கமாய்க் கேட்டருளும். பிதாவே, உமது அன்பான திருக்கரம் இவர்கள் மேல் அமர்வதாக. உமது பரிசுத்தாவியானவர் எப்பொழுதும் இவர்களோடு இருப்பாராக. தாங்கள் வாழ்நாளெல்லாம் இவர்கள் உமக்கு ஊழியம் செய்யவும். உம்மோடு எக்காலமும் இருக்கவும். உமது வசனத்தை அறிந்து கீழ்ப்படிவதில் இவர்களை வழி நடத்தியருள உம்மோடும் பரிசுத்தாவியோடும் ஒரே கடவுளாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

### வரவேற்பு

புதியதாகத் திடப்படுத்தல் பெற்றவர்கள் எழுந்து சபையாரைப் பார்த்து நிற்க, குருவும் சபையாரும் எழுந்து நின்று யாவரும் சேர்ந்து அவர்களிடம் சொல்லுவதாவது:

**பிரியமானவர்களே, இச்சபையின் உறுப்பினராகிய நாங்கள், திருச்சபையின் பொது வாழ்க்கையின் பங்காளிகளாக உங்களை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். கடவுளையும், அவருடைய திருமைந்தனும் நமதாண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நீங்கள் வளரும்படி, எங்கள் ஜெபங்களையும் நட்பையும் உங்களுக்கு வாக்களிக்கிறோம். இவ்வுலகில் பரிசுத்தாவியின் ஐக்கியத்தில் நாமெல்லாரும்**

**அவருக்குச் சேவை செய்யவும், பரத்திலுள்ள பரிசுத்தவான்களோடு நாம் பூரண ஐக்கியமடையவும் ஆண்டவர் அருள்புரிவாராக.**

பாடல் (உறைகள் மட்டும் சேகரித்தல்)

அறிவிப்புகள்

இரண்டாவது லித்தானியா:

பரத்திலிருந்து வரும் சமாதானத்திற்காகவும் நம்முடைய ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும், கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

அகில லோக சமாதானத்திற்காகவும், கடவுளுடைய பரிசுத்த சபைகளின் நல்வாழ்வுக்காகவும், அவைகளின் ஒருமைப் பாட்டுக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

நம்முடைய பேராயர்களும், மற்றெல்லாப் பணிவிடைக்காரரும், விசேஷமாய்.... என்னும் நமது பிரதமப் பேராயரும்............. என்னும் நமது பேராயரும்............., வட இந்திய திருச்சபையின் பிரதம பேராயர்................. மார்த்தோமா திருச்சபையின் பிரதம பேராயர்................ நல்ல இருதயத்தோடும், சுத்த மனச்சாட்சியோடும் தங்கள் பணிவிடையை நிறைவேற்றக் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

நமது தேசத்தின் அதிபதிகளுக்காகவும் அதிகாரம் வகிப்பவர் எல்லாருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

வியாதியஸ்தர், உபத்திரவப்படுவோர், துக்கப்படுவோர், மரணத்தருவாயிலிருப்போர் அனைவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

ஏழைகள், பட்டினியாயிருப்போர், அனாதைகள், விதவைகள், உபத்திரவப்படுவோர் அனைவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

அந்தகாரத்தினின்று நம்மைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய மகத்துவங்களைக் காண்பிக்கும் பொருட்டாக, நமக்காகவும், கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கை பண்ணும் யாவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

இவ்வுலகத்தில் அவரைச்சேவித்து இப்போது ஓய்வு பெற்றிருக்கும் அவரது அடியார் அனைவரோடுங்கூட நாம் அவரது முடிவற்ற மகிழ்ச்சியின் நிறைவில் பங்குபெற கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே, கிருபையாயிரும்**

அப்பம் பிட்குதல் பக்கம் 7லிருந்து

SPC

# உடன்படிக்கை ஆராதனை முறைமை

*முகவுரை*

*ஒரு பாட்டுப் பாடவும்*

*சபையார் நின்றுகொண்டிருக்க, குரு சொல்லுவது:*

## ஜெபம் செய்வோம்

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருள எங்கள் ஆண்டவர் கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*சபையார் உட்கார்ந்திருக்க, குருவானவர் சொல்லுவது:*

பிரியமானவர்களே, கிறிஸ்து இயேசுவினால் பாவத்தினின்று மீட்கப்பட்டு, அவர் மூலமாய்க் கடவுளுக்கென்று பிரிதிஷ்டை செய்யப்பட்டு, அவருக்குள் கிறிஸ்தவ வாழ்க்கை செய்ய நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை மத்தியஸ்தராகக் கொண்டதும், நித்திய காலமாக நிலைத்திருக்கத் தக்கதாக அவருடைய சொந்த இரத்தத்தினாலே முத்திரிக்கப்பட்டதுமான இந்தப் புதிய உடன்படிக்கைக்குப் பங்காளிகளாகி, புதிய வாழ்க்கைக்குள் பிரவேசித்திருக்கிறோம்.

கடவுள், இந்த உடன்படிக்கையின்படி, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்குள் இவ்வுலகத்தைத் தம்முடன் ஒப்புரவாக்கிக்கொள்வதோடு, நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள், அவர் வாக்குத்தத்தம்பண்ணின எல்லாவற்றையும் நிறைவேற்றவும் செய்கிறார். நமது அன்றாட வாழ்க்கையில் அவரது கிருபையையும், நன்மைகளையும் கண்கூடாக நாம் காண்பதால் அவரது வாக்குத்தத்தம் நிலைத்திருக்கிறதென்று நிச்சயமாக அறிந்திருக்கிறோம்.

நம்மைப் பொறுத்தவரையில், நாம் இந்த உடன்படிக்கையை விசுவாசத்தின் மூலமாய் ஏற்றுக்கொண்டு, இனி நமக்காக அல்ல, நம்மை நேசித்து நமக்காகத் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தவரும், தமது நாம மகிமைக்காகப் பணியாற்றும்படி நம்மை அழைத்திருக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்காகவே ஜீவிக்கப் பிரதிக்கினை செய்திருக்கிறோம்.

நாம் நம்மையே கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததைத் திரும்பத் திரும்ப, சிறப்பாக திருவிருந்தில் சேரும்பொழுதெல்லாம் புதுப்பித்துக் கொள்ளுகிறோம். இந்த நாளில், மகிழ்ச்சியுடனும், பக்தி வினயத்துடனும், கடவுளுடன் நாம் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டுமென்ற சிறந்த நோக்கத்தோடு கூடி வந்திருக்கிறோம்.

ஆகையால், அவரது மட்டற்ற கிருபைகளையும், அழைப்பின் நம்பிக்கையையும் நினைவுகூர்ந்தவர்களாய், நமது இருதயங்களை அவரிடத்தில் வணக்கத்துடன் உயர்த்துவோமாக.

**போற்றுதல்**

ஜெபம் செய்வோம்

எல்லாரும் முழங்காற்படியிடவும்

பிதாவாகிய கடவுளை வணங்குவோமாக;

நம்மை உண்டாக்கின அன்பின் இறைவன் அவரே;

நம்மை நிமிடந்தோறும் பாதுகாத்து நிலைநிறுத்துகிறவர்;

அநாதி சிநேகத்தால் நம்மை சிநேகிக்கிறவர்; நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவில் தம்முடைய மகிமையின் அறிவாகிய ஒளியைக் கொடுத்தவர்

அவரை வணங்குவோமாக.

**உம்மை வணங்குகிறோம் கடவுளே; உம்மையே எங்கள் ஆண்டவர் என்று அறிக்கையிடுகிறோம்.**

நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கிருபையைப் புகழுவோமாக;

ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நமக்காக ஏழையானவர் அவரே;

இறையாட்சியின் நற்செய்தியைப் பிரசங்கித்து, நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தவர்;

நம்மைப்போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவர்;

மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவர்;

மரித்தும் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவர்;

சகல விசுவாசிகளுக்கும் மோட்ச இராஜ்யத்தைத் திறந்தவர்;

பிதாவின் மகிமையில், கடவுளுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவர்;

நமது அரசராகவும் நியாயாதிபதியாகவும் மீண்டும் வரப்போகிறவர்

அவரைப் போற்றுவோமாக.

**கிறிஸ்துவே, தேவரீர் மகிமையின் இராஜா**

பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் களிகூருவோமாக, கர்த்தரும், ஜீவனைக் கொடுக்கிறவருமாயிருக்கிறவர் அவரே; நம்மைக் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களும், கடவுளுடைய பிள்ளைகளுமாக்குகிறவர்;

நாம் கடவுளுடைய பிள்ளைகளென்று நம்முடைய ஆவியுடன் கூடச் சாட்சி கொடுக்கிறவர்;

அவரது பரம ஞானத்தால் நம்மைக் கற்பிக்கிறவர்;

அவரது வல்லமையால் நம்மைக் கற்பிக்கிறவர்;

நாம் நினைப்பதற்கும், கேட்பதற்கும் அதிகமாக நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறவர்

அவரில் களிகூருவோமாக.

**பரிசுத்தாவியாகிய தேவனே, உமக்கே எல்லாத் துதியுமுண்டாவதாக.**

மௌன ஜெபம்

நன்றி

நாமெல்லாரும் எழுந்து நின்று கடவுளுடைய சொல்லிமுடியாத கிருபைகளுக்காக அவரைத் தோத்தரிப்போமாக.

எல்லா நன்மைக்கும் ஊற்றும் காரணருமாயிருக்கிற எங்கள் பரம பிதாவாகிய கடவுளே (கடந்த ஆண்டில் மட்டும் அல்ல), எங்களது ஜீவியகால முழுவதம் உமது கிருபையால் எங்களைப் பராமரித்தவரே, இந்த நேரத்தில் எங்களை இங்குக் கூட்டிச் சேர்த்த உமது அன்புள்ள தயவிற்காக.

**உமது பரிசுத்த நாமத்தைப் புகழுகிறோம், ஆண்டவரே**

தேவரீர் எங்களை மீட்டுக்கொண்டு, கிறஸ்துவுக்குள் ஓர் உன்னத அழைப்பிற்குப் பாத்திரவான்களாக்கியிருப்பதற்காகவும், உமது பரிசுத்தாவியின் ஐக்கியத்தைத் தந்தருளியதற்காகவும், உமது திருச்சபையின் சாட்சிகளாக எங்களை அழைத்ததற்காகவும்,

**உமது பரிசுத்த நாமத்தைப் புகழுகிறோம், ஆண்டவரே**

இருளில் எங்களுக்கு ஒளியாகவும், துன்பத்திலும், சோதனையிலும் எங்களைப் பலப்படுத்தும் கன்மலையாகவும், எங்கள் மகிழ்ச்சியில் கிரீடமாகவும் எங்கள் ஊழியங்களில் எங்களுக்குப் போதுமான சன்மானமாகவும் தேவரீர் இருப்பதற்காகவும், உமது நீடிய பொறுமைக்காகவும், நிறைவான பேரருளுக்காகவும்.

**உமது பரிசுத்த நாமத்தைப் புகழுகிறோம், ஆண்டவரே**

**பாவ அறிக்கை**

மௌனப் பாவ அறிக்கை

நம்மை நாமே வஞ்சித்து, அவரது பிரசன்னத்தை இழந்து போகாதபடிக்கு நமது பாவங்களைக் கடவுளிடத்தில் தாழ்மையாய் அறிக்கையிடுவோமாக.

ஜெபம் செய்வோம்:

எங்கள் பிதாவாகிய தேவனே, உமது நேச குமாரானில் எங்கள் வாழ்க்கைக்கு முன்மாதிரியைக் காண்பித்தீரே, நாங்கள் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள மந்தமாயிருந்ததையும், அவரைப் பின்பற்ற விரும்பாததையும், சிலுவையைச் சுமக்கத் தயங்கியதையும் வெட்கத்துடனே அறிக்கையிடுகிறோம்.

**எங்களுக்கு இரங்கி, எங்களை மன்னித்தருளும், தயவுள்ள ஆண்டவரே.**

உம்மை வழிபடுவதில் எங்கள் குறைபாட்டையும், திருவுறவையும் திருவருட்சாதனங்களை நாங்கள் அசட்டை செய்வதையும், கிறிஸ்துவுக்காக சாட்சியாயிருப்பதில் எங்கள் தயக்கத்தையும், உமக்கு பணியாற்றுவதில் எங்கள் பொறுப்பை ஏற்க மறுப்பதையும், நீர் தந்துள்ள வரங்களை அரைகுறையாகப் பயன்டுத்தியதையும் மன்னித்தருளும் ஆண்டவரே;

**எங்களுக்கு இரங்கி, எங்களை மன்னித்தருளும், தயவுள்ள ஆண்டவரே.**

சகலவித அன்புத் தாழ்ச்சியையும், தகுந்த யோசனையின்றிப் பிறரைக் குற்றப்படுத்தித் தீர்ப்பு செய்ததையும், மற்றவரை மனப்பூர்வமாய் மன்னியாததையும், ஒப்புரவை நாடுவதில் தயங்கியதையும், எங்கள் அயலாருக்கு நாங்கள் செய்யவேண்டிய அளவுக்கு உதவிசெய்யாததையும் மன்னித்தருளும் ஆண்டவரே;

**எங்களுக்கு இரங்கி, எங்களை மன்னித்தருளும், தயவுள்ள ஆண்டவரே.**

**கடவுளே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி, என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும், என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். கடவுளே, சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும். சங். 51:1, 2, 10**

*சபையார் இன்னும் முழங்காலில் நிற்க, குரு நின்று சொல்லுவது;*

நாங்கள் அவரிடம் கேட்டு, உங்களுக்கு அறிவிக்கிற செய்தியாவது; கடவுள் ஒளியே, அவரில் இருள் எவ்வளவேனுமில்லை. அவர் ஒளியிலிருக்கிறதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவர் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாவோம்; உண்மை நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு, ஆண்டவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1 : 5, 7 - 9.

**ஆமென். தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.**

ஆண்டவர் உங்களோடிருப்பாராக:

**அவர் உமது ஆவியோடுமிருப்பாராக.**

**ஜெபம் செய்வோம்**

கடவுளே, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவை எங்களுக்குத் தந்தவரே, நாங்கள் பூரண விசுவாசத்துடன் உம்மண்டை சேர்ந்து, நித்திய உடன்படிக்கையில் என்றும் நிலைத்திருக்க எங்களுக்குக் கிருபை செய்தருளவேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தாழ்மையோடு வேண்டிக்கொள்கிறோம். ஆமென்

எல்லோரும் எழுந்து நிற்க, பின்வரும் பாடங்கள் வாசிக்கப்படும்.

பழைய ஏற்பாடு: எரேமியா 31 : 31 - 33

நிருபவாக்கியம்: எபிரெயர் 12 : 22-25அ

பாமாலை

சுவிசேஷவாக்கியம்: மத்தேயு 11 : 27 - 30

பாமாலை

அருளுரை ஆற்றலாம்

**உடன்படிக்கை**

சபையார் நின்றுகொண்டிருக்க, குரு சொல்லுவது:

பிரியமானவர்களே, கடவுள் தம்முடைய ஜனங்களோடு செய்த உடன்படிக்கையில் நம்முடைய பங்கை முழு இருதயத்துடனும் புதுப்பித்து, கிறிஸ்துவின் நுகத்தை நம்மேல் ஏற்றுக்கொள்வோம்.

கிறிஸ்துவே நமது ஊழியத்தையும் அதற்குரிய இடத்தையும் தீர்மானிக்கவேண்டுமென்றும்; முடிவில் அவரே நமது ஊழியத்திற்குத் தகுந்த சன்மானமாக இருக்க வேண்டுமென்றும் நாம் மனநிறைவுடன் ஏற்றுகொள்கிறோமென்பதே அவருடைய நுகத்தைக் சுமப்பதின் கருத்தாகும்.

கிறிஸ்துவுக்காக நாம் செய்யவேண்டிய ஊழியங்கள் பல. அவற்றில் சில எளிதானவை, சில கடினமானவை, சில கண்ணியமானவை, வேறு சில நிந்தையைத் தரக்கூடியவை; சில நமது இயற்கை விருப்பங்களுக்கும், இவ்வுலக நாட்டங்களுக்கு பொருத்தமானவை;

வேறு சில இவ்விரண்டிற்கும் மாறானவை. சில ஊழியங்களின் மூலம் நாம் நம்மையும் கிறிஸ்துவையும் திருப்தி செய்யக்கூடும், இன்னும் சில ஊழியங்களில் நம்மை வெறுத்தாலொழிய கிறிஸ்துவை மகிழ்விக்க முடியாது. எனினும் நம்மைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே இவை எல்லாவற்றையும் செய்ய நமக்குப் பலமுண்டு.

ஆகையால், கடவுளுடைய உடன்படிக்கையை நாம் ஏற்றுக்கொண்டு, அதை நம்முடையதாக்குவோம். நம்முடைய இருதயத்தைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய வல்லமையினால் ஒருபொழுதும் பின்வாங்காதிருக்கத் தீர்மானிப்போமாக.

இவ்விதம் ஆயத்தப்பட்டவர்களாய், அவருடைய கிருபையையும், வாக்குத்தத்தங்களையும் நம்பி, முழஙகாலில் நின்று, தாழ்மையாக நம்மை அவருக்குத் திரும்பவும் அர்ப்பணம் செய்வோம்.

*எல்லோரும் முழங்காற்படியிடுவர்:*

*குரு: எல்லோருடைய சார்பிலும் ஏறெடுக்கும் ஜெபம்.*

எங்கள் ஆண்டவராகிய கடவுளே, பரிசுத்த பிதாவே, எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபையுள்ள உமது உடன்படிக்கையில் நாங்கள் பங்காளிகளாகும்படி எங்களை அழைத்தவரே, உமக்கு கீழ்ப்படிதலாகிய இலகுவான நுகத்தை மகிழ்ச்சியோடு நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். உமது அன்பினிமித்தமாக, உம்முடைய பரிபூரணச் சித்தத்தைத் தேடி, அதை செய்ய ஒப்புக்கொள்ளுகிறோம். இனி நாங்கள் எங்களுக்கல்ல உமக்கே சொந்தம்.

*சபை: சேர்ந்து ஏறெடுப்பது:*

**நான் எனக்கல்ல, உமக்கே சொந்தம், உசீக்கு சித்தமானதைச் செய்யவும், உமக்கு சித்தமானவர்களோடு இருக்கவும், நற்செயல்களை செய்யவோ அல்லது துன்பங்களைச் சகிக்கவோ, உமது பணிக்கென்று பயன்படுத்தப்படவோ, பயன்படுத்தப் படாமலிருக்கவோ; உயர்த்தப்படவோ; தாழ்த்தப்படவோ; நிரப்பப்பட்டோ, வெறுமையாக்கப்படவோ; எல்லாமுடையனாகவோ, யாதுமற்றவனாகவோ; எதுவானாலும் உம்முடைய விருப்பப்படியேயும், உமது தீர்மானத்தின்படியேயும் நடப்பேனென்று**

**எல்லாவற்றையும் உமக்குப் பூரணமாகவும், மனமுவந்தும் ஒப்படைக்கிறேன்.**

மகிமையும், கிருபையும் நிறைந்த பிதா, குமாரன், பரிசுத்தாவியுமாகிய கடவுளே, நீர் என்னுடையவர்; நான் உம்முடையவன். அப்படியே ஆகக்கடவது. பூலோகத்தில் நான் புதுப்பித்த இந்த உடன்படிக்கை, பரலோகத்திலும் முத்தரிக்கப்படுவதாக. ஆமென்.

திருவிருந்து ஆராதனை வழிப்பாடு யாவரும் நிற்க. குரு சொல்லுவது.

இது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; பாவமன்னிப்புக்கென்று இது அநேகருக்காகச் சிந்தப்படுகிறது' என்றார். இயேசு. மத். 26:28.

கிறிஸ்துவே, உமக்கே தோத்திரமுண்டாவதாக.

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது.' சங்க. 133:1.

நற்கருணை வழிபாடு ( பக்கம் 7)

# தபசு நாட்களின் வழிபாடு

ஜெபம்

**பவனி: (அனைவரும் நிற்க)**

இறைவழிப்பாட்டிற்கு அழைப்பு

**ஆயர்:** கடவுள் ஒளியாய் இருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை; அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1 யோவான் 1 : 5, 7

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமூகத்தைவிட்டு என்னை தள்ளாமலும், உமது தூய ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்து கொள்ளாமலும் இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். சங். 51 : 10 -12

பிரியமானவர்களே இந்த தபசு நாட்களில் நாம் நமது ஆண்டவர் இயேசுவைப்போல வாழவேண்டுமென்ற தேவனுடைய விருப்பத்தை நினைவு கூற அழைக்கப்படுகின்றோம். எனவே நமது ஆண்டவர் இம்மண்ணுலகில் வாழ்ந்த காலங்களையும், அவரது அன்பின் செயல்களையும், அருள் நிறைந்த வார்த்தைகளையும், மரணம் வரை கீழ்ப்படிந்து வெற்றி சிறந்ததையும் நினைவு கூறுவோம்.

அமைதி

**பாமாலை 88** (முழங்காலில் நின்று பாடுதல்)

**ஆயர்:** தந்தையே உமது மாபெரும் ஈவாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்காகவும், அவரது தூய்மையும், தாழ்மையுமான பிறப்பிற்காகவும் மற்றும் அவரது திருப்பணிக்காகவும், வாழ்வுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**சபை: கர்த்தாவே உமக்கு நன்றி**

**ஆயர்:** இயேசுவின் நிறைவான வாழ்வுக்கர்கவும், ஊழியம் செய்து கொள்ளப்படாமல் மனுமக்களுக்கு ஊழியம் செய்வதில் அவருக்கு இருந்த ஆர்வத்திற்காகவும், அவரது நற்போதனைகளுக்காகவும்,

துன்புற்றோருக்கு அவர் காட்டின இரக்கத்திற்காகவும், அன்பும், ஆற்றலும் நிறைந்த அவரது செயலுக்காகவும், உண்மையும், கிருபையும் நிறைந்த அவரது தன்மைக்காகவும் நன்றி செலுத்துகிறோம்.

**சபை: கர்த்தாவே உமக்கு நன்றி**

**ஆயர்:** தமது பணியை செய்து முடிப்பதில் அவருக்கிருந்த உறுதிக்காகவும் தந்தையாகிய உம்மை முற்றும் சார்ந்து வாழ்ந்த வாழ்விற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**சபை: கர்த்தாவே உமக்கு நன்றி**

**ஆயர்:** கெத்செமனே தோட்டத்தில் அவர் பட்ட வேதனைக்காகவும், தமது துன்பங்களை பொறுமையுடன் சகித்து, சிலுவை மரணம்வரை தம்மை அர்ப்பணித்து வாழ்ந்த வாழ்வுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**சபை: கர்த்தாவே உமக்கு நன்றி**

**ஆயர்:** இயேசுவின் மகிமையான உயிர்த்தெழுதலுக்காகவும், பரமேறுதலுக்காகவும், தூய ஆவியை அளித்து புத்துயிர் கொடுத்து வருகிறதற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**சபை: கர்த்தாவே உமக்கு நன்றி**

**சங்கீதம் 32 (அல்லது) 51 (அல்லது) 139 : 1-18)**

**(முழங்காலில் நின்று அனைவரும் சேர்ந்து சொல்லுதல்)**

அமைதி

**பிழை உணர்தல்**

**ஆயர்:** கிருபை நிறைந்த தந்தையே, உமது அருளின் நிறைவில் எங்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியும், காலங்களையும், நேரங்களையும் வகுத்திருக்கிறீரே, தபசு காலமாகிய இந்த நாட்களில் எங்களை இரக்கத்துடன் பாரும். கடந்த காலத்தின் பிழைகளையும். உம்மை மறந்துவிட்ட நிலையையும் நாங்கள் நினைத்துப் பார்க்க துணை செய்யும். நீர் காணும் முறையில் எங்களையே நாங்கள் காணவும் எங்கள் தவறுகளையும் மீறுதல்களையும் உணர்ந்து கொள்ளக் கூடாத பிடிவாதத்தை, நாங்கள் உணரவும் எங்கள் உள்ளத்தை திறந்தருளும்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**ஆயர்:** எங்கள் மனசாட்சி மந்தமாகவும், கடமை உணர்ச்சி பின்தங்கியும் இருக்கிறது. எங்களை நாங்கள் நேசிப்பது போல அயலாரை நாங்கள் நேசிக்கவில்லை. உமது அழைப்பை சிறிதேனும் நினைத்துப் பார்க்காமல் மனம் போல் வாழ்ந்து வருகிறோம்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**ஆயர்:** பேராசையும், தன்னலமுடையவர்களாகவும், பொறாமை, பொருளாசை, வீண்பெருமை நிறைந்தவர்களாகவும் வாழ்ந்து வருகின்றோம். பொன்னையும், பொருளையும் நிறைய சம்பாதித்தால் மட்டுமே வாழ்க்கையின் நிறைவை ஒருவன் அடையமுடியும் என்றே எங்கள் வாழ்க்கையை நடத்துகின்றோம்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**ஆயர்:** மறைவாக பாவத்தில் ஈடுபடுகின்றோம். செய்வதையும் நினைத்துப் பார்ப்பதில்லை, இயல்பான சூழ்நிலையில் எல்லாவித சோதனைக்கும் ஆளாகிறோம் மனந்திரும்பி, இனிமேல் செய்யமாட்டேன் என்று தீர்மானித்து விட்ட பாவங்களை மறுபடியும் செய்கிறோம்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**ஆயர்:** நீர் அளித்துள்ள நல்வரங்களை தகுந்த முறையில் உபயோகிப்பதில்லை. காலங்களையும் பயன்படுத்தாமல் வீணாக கழித்து விட்டோம்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**ஆயர்:** உலகின் துயரை கண்டும் காணாமல் இருந்து விட்டோம் உமது அருள் செய்திக்கேற்றவாறு பணி செய்வதில் முற்றிலுமாக தவறிவிட்டோம்.

**சபை: எங்களை இரட்சித்து உதவியருள ஆண்டவரே தாழ்மையோடு வேண்டுகிறோம்.**

**அனைவரும் சேர்ந்து சொல்லுதல்:** எங்கள் இறைவனே, உமது அருள் சமூகத்தை நாடி உமது திருமுகத்தை தேடுகின்ற உள்ளமே உமது உறைவிடம். எங்கள் பாவப் பிழைகளால் அடைந்துள்ள அவமானத்தையும், துயரத்தையும் அதிகமாக நாங்கள் உணரச்செய்யும். செய்ய வேண்டிய நன்மையானவற்றைசெய்யாமல் செய்யக்கூடாத தவறுகளை செய்துவிட்ட நிலையை உணர்ந்து உம்மிடம் வருகிறோம். உமது திரு உளத்துக்கு இசைவாக எங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஆற்றலை தாரும். அனுதின வாழ்வில் உம்மைப் பின்பற்றி உதவுகின்றவர்களாய் வாழ அருள்புரியும். எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமே வேண்டுகிறோம். ஆமென்.

**திருமறைபாடம்**

**கீர்த்தனை**

**அருளுரை**

**காணிக்கைப் பாடல்**

**வழிநடத்துதலுக்காக ஜெபித்தல்** (அனைவரும் முழங்காலில் நின்று)

**ஆயர்:** எங்கள் முற்பிதாக்கள் உம்மையே நம்பியிருந்தார்கள், அவர்கள் வெட்கபடுத்தப்படவில்லை.

**சபை: ஆண்டவரே, உமது வாக்குறுதிகளை நிறைவேற்றியருளும்.**

**ஆயர்:** இறைவாக்குரைப்போர் உம்மை நாடினர் உம் வார்த்தைகளை அவர்கள் உதடுகளில் உதிர்க்க செய்தீர்.

**சபை: ஆண்டவரே, உமது வாக்குறுதிகளை நிறைவேற்றியருளும்.**

**ஆயர்:** சங்கீதக்காரர்கள் உம்மில் அக மகிழ்ந்தார்கள் அவர்கள் பாடல்களில் நீர் மையாக இருந்தீர்.

**சபை: ஆண்டவரே, உமது வாக்குறுதிகளை நிறைவேற்றியருளும்.**

**ஆயர்:** அப்போஸ்தலர்கள் உமக்காக காத்திருந்தனர். அவர்கள் தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்.

**சபை: ஆண்டவரே, உமது வாக்குறுதிகளை நிறைவேற்றியருளும்.**

**ஆயர்:** இவ்வேழையும் கதறினேன் இறைவா நீர் செவி சாய்த்து என்னை எல்லா துன்பங்களின்றும் காப்பாற்றினீர்.

**சபை: ஆண்டவரே, உமது வாக்குறுதிகளை நிறைவேற்றியருளும்.**

**அனைவரும் சேர்ந்து:** நிறை அன்பும், புது ஆற்றலும் ஆழ்ந்த பக்தியையும் எங்களில் உண்டு பண்ணும். இறைவனே, உமக்கு விரோதமாக நாங்கள் செய்தவை எங்களுக்கு நீங்கா துயரையும் அவமானத்தையும் ஏற்படுத்தின, இவைகளிலிருந்து எங்களை விடுதலையாக்கும். நீர் அளிக்கும் வாக்குறுதிகளின் வல்லமையால் உலக முடிவு வரை வெற்றிலும், தோல்வியிலும், நன்மையிலும், தீமையிலும் உம்மில் நிலைத்திருக்க துணைபுரிய வேண்டுமென்று எங்கள் நம்பிக்கையின் அடிப்படையான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரிலே வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

**ஜெபங்கள்**

போற்றுதலுக்குரிய தந்தையே எங்கள் நிமித்தம் துன்பத்தையும், வேதனையையும், மரணத்தையும் ஏற்றுக்கொண்டவரே, நாங்கள் சுய வெறுப்பினாலும், தாழ்மையினாலும் உம்மை பின்பற்ற ஆவியின் நிறைவை எங்களுக்குத் தாரும்.

துன்புற்றோரைத் தாங்கவும், தேவையுள்ளவர்களையும், அனாதைகளையும் காப்பாற்றவும், உடலிலும் உள்ளத்திலும் நோயுற்றோரை ஆறுதல் படுத்தவும் பாரம் சுமப்போரின் பாரங்களை பகிர்ந்து கொள்ளவும். ஏழைகள் தனிமையில் இருப்போர் இவர்களில் உம்மைக் காணவும். உமது ஆழ்ந்த அன்பினால் எங்களை ஏவியருள வேண்டுமென்று உமது திருப்பெயரிலே வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

**அனைவரும் சேர்ந்து சொல்லுதல்:**

**எல்லாம் வல்ல ஆண்டவரே இரக்கமுள்ள தந்தையே எல்லா மக்களின் மேலும் பரிவு கொண்டு பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பி மீட்படைவதை விரும்புகிறவரே, இரக்கத்துடன் எங்கள் குற்றங்களை மன்னித்தருளும். பாவ பாரத்தினால் சோர்ந்து வேதனையுற்ற எங்களை ஏற்றுக்கொண்டு ஆறுதல் படுத்தும். மன்னிப்பதும் இரக்கங்கொள்வதும் உமது தன்மை எனவே நீர் மீட்டுக்கொண்ட எங்களை நியாயந்தீர்க்காமல் எங்களை அன்புடன் ஏற்றுக்கொண்டருளும். இவ்வுலகிலும், மறுமையிலும் உம்மில் நிலைத்திருக்க உதவி புரியும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.**

**பாமாலை 408 / 409 (முழங்காலில் நின்று பாடுதல்)**

**ஆயர்:** கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்

**சபை: கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்**

**ஆயர்:** கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்.

**சபை: பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே... ஆமென்.**

சர்வ வல்ல நித்திய கடவுளே மனுக்குலத்தின் பேரிலுள்ள உமது மாபெரும் அன்பினால் உமது குமாரானாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி அவர் மனுவுரு ஏற்று சிலுவையின் மரணத்தை சகிக்கவும் அனைத்து மனுமக்களுக்கு அவருடைய தாழ்மையும் எளிமையான வாழ்க்கையை பின்பற்றவும் வேண்டுமென்று விரும்பியவரே, நாங்கள் அவருடைய சுயவெறுப்பினை கடைப்பிடித்து அவருடைய உயிர்த்தெழுதலில் பங்குடையவர்களாகும்படி வாழ எங்களுக்கு துணைபுரிய வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம்.

**இறைஆசி:**

**பாமாலை 36 (முதல் சரணம் மட்டும்) அனைவரும் நிற்க**

**ஆயர் திரும்பி செல்லுதல்**

# உயிர்த்தெழுந்த திருநாள்

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து; நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே.

ஆதலால், பழைய புளித்த மாவோடே அல்ல; துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம். 1 கொரி. 5:7.

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

அவர் மரித்து, பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்; நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். ரோம. 6:9

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து; நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

மனுஷனால் மரணம் உண்டானபடியால்; மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல; கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 1 கொரி. 15:20

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

SPC